بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 8

இதழ் 39

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - ரபீயுல் அவ்வல் 12 ★ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - தபூக் 28
★28 செப்டம்பர் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

اَفَلَا یَتُوۡبُوۡنَ اِلَی اللّٰہِ وَیَسۡتَغۡفِرُوۡنَہٗ ؕ وَاللّٰہُ غَفُوۡرٌ رَّحِیۡمٌ ﴿۷۵﴾

**பொருள்**

இதன் பின்னர் அவர்கள் அல்லாஹ்விடம் திரும்பி அவனிடம் (தங்கள் பாவங்களுக்காக) மன்னிப்புக் கோரமாட்டார்களா? அல்லாஹ்வோ மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (அல்மாயிதா: 75)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنۡہَرۡ ﴿۱۱﴾

**(உம் உதவியைக் கோருபவரை நீர் கடிந்து கொள்ளாதீர்) என்ற கட்டளை திருக்குர்ஆனில் வந்துள்ளது. எனவே நினைவிற் கொள்ளுங்கள்! உங்களிடம் யாசிப்பவரை நீங்கள் கடிந்து கொள்ளாதீர்கள்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### யாசிப்பவரை கடிந்து கொள்ளக் கூடாது

யாசிப்பவரைக் கண்டு கடிந்து கொள்வது சில மனிதர்களின் பழக்கமாக உள்ளது. ஒரு மவ்லவிய்யத்தின் நரம்பை (அதாவது மதகுருவின் இயல்பை)க் கொண்டவர்கள் அந்த நபருக்கு ஏதாவது கொடுப்பதற்கு பகரமாக பிச்சை எடுப்பது குறித்த விவகாரங்களை புரிய வைக்கத் துவங்கி விடுகின்றனர். அவர் மீது தங்களது மவ்லவிய்யத்தின் மதிப்பச்சத்தை ஏற்படுத்தியவாறு சிலநேரங்களில் அவரை கடும் சோம்பேறி என்றும் கூறிவிடுகின்றனர். (யாசிப்பவரை இவ்வாறு கடிந்து கொள்ளும்) இந்த மக்களுக்கு அறிவு இல்லை என்பதும், நல்லுள்ளம் மற்றும் தூய இயல்பு படைத்த மனிதனுக்கு அருளப்படும் சிந்திக்கும் திறனை இவர்கள் பெற்றிருக்கவில்லை என்பதும் வருந்தத்தக்க விஷயம் ஆகும். உடல் ஆரோக்கியம் இருந்தபோதிலும் ஒருவர் யாசகம் கேட்டு வந்தால் அவரே பாவம் செய்கின்றார்; அவருக்கு சிறிது கொடுத்து விடுவதால் கொடுப்பவர் மீது எந்தப் பாவமும் இல்லை என்பதை கூட இவர்கள் சிந்திப்பதில்லை. இன்னும் கூறப்போனால், لَوْ اَتَاكَ رَاكِبًا என்ற சொற்கள் ஹதீஸில் வந்துள்ளன. அதாவது ஒரு பிச்சைக்காரன் குதிரையில் (சவாரி செய்து) உம்மிடம் வந்தாலும் அவருக்கு ஏதாவது கொடுத்து விட வேண்டும்.

மேலும் وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنۡہَرۡ ﴿۱۱﴾ என்ற கட்டளை திருக்குர்ஆனில் வந்துள்ளது. அதாவது உம்மிடம் உதவி கோருபவரை கடிந்து கொள்ளக் கூடாது. இந்த வகை யாசிப்பவரை கடிந்து கொள்ளக் கூடாது; இந்த யாசிப்பவரிடம் கடிந்து கொள்ளுங்கள் என்று இதில் எந்த வேறுபாடும் செய்யப்படவில்லை.

எனவே நினைவிற் கொள்ளுங்கள்! யாசிப்பவரை கடிந்து கொள்ளாதீர்கள். ஏனெனில் இதில் ஒரு வகையான தீய ஒழுக்கத்திற்கான விதை விதைக்கப்படுகின்றது. யாசிப்பவரிடம் விரைந்து அதிருப்தி அடையாமல் இருப்பதே நல்லொழுக்கத்தின் தேட்டமாகும். (யாசிப்பவரிடம் கடிந்து கொள்ளும்)

இந்த வழிமுறையின் மூலமாக உங்களை நன்மையிலிருந்து

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

**உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஏதாவது நன்மையைக் கொண்டிருக்கின்றது. எந்த நன்மையும் பயக்காத எந்தவொரு பொருளும் இல்லை. இந்தக் கட்டளையிலிருந்து பயனடைவதை முஸ்லிம்கள் விட்டு விட்டனர் என்பதும், ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக்கான பணியை புறக்கணித்து விட்டனர் என்பதும் வருந்தத் தக்கது ஆகும்**

**ஐரோப்பியர்கள் திருக்குர்ஆனை ஒப்புக் கொள்ளாதபோதிலும் இந்தக் கட்டளையின்படி அமல் செய்தார்கள். மேலும், அறிவியலில் எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்துவிட்டார்கள் என்றால் முழு உலகையும் வெற்றி கொண்டு விட்டார்கள்**

اِنَّا جَعَلۡنَا مَا عَلَی الۡاَرۡضِ زِیۡنَۃً لَّہَا لِنَبۡلُوَہُمۡ اَیُّہُمۡ اَحۡسَنُ عَمَلًا ﴿۸﴾

நிச்சயமாக நாம் அவர்களுள் எவர் மிகச் சிறந்த முறையில் செயலாற்றுகின்றார் என்பதைச் சோதிப்பதற்காகப் பூமியி(ன்மே)லுள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கி விடுவோம்.

(அந் கஹ்ஃப் :8)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்(ரலி)அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

நாம் உலகில் ஆயிரக்கணக்கான பொருட்களை படைத்திருக்கின்றோம் என்று அல்லாஹ் கூறுகின்றான். மனிதனுக்காக ஒரு பணியை உருவாக்க வேண்டும். அவன் அதன் மூலம் பொருட்களை கண்டறிய வேண்டும் பின்னர் அவற்றிலிருந்து பயனடைய வேண்டும் என்பது நோக்கமாகும்.

மேலும், ஸீனத்தன் என்று கூறி உலகின் ஒவ்வொரு பொருளும் ஏதாவது ஒரு பயனைக் கொண்டிருக்கின்றது; மேலும் எந்த நன்மையும் இல்லாத எந்தவொரு பொருளும் இல்லை என்பதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்

## நபிமொழி

(2445) ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஏழு விஷயங்களை செய்வதற்கு கட்டளையிட்டார்கள்: மேலும் ஏழு விஷயங்களை செய்வதிலிருந்து தடை செய்திருந்தார்கள். பின்னர் (எவற்றை செய்வதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததோ) அந்த விஷயங்களை அன்னார் குறிப்பிட்டார்கள். நோயாளியை நலம் விசாரிப்பது, ஜனாஸாக்களுடன் செல்வது, தும்மக் கூடியவருக்கு பதில் அளிப்பது, ஸலாத்திற்கு பதில் கூறுவது, மேலும் அநீதியாளருக்கு உதவி செய்வது, விருந்திற்கு அழைப்பவரின் அழைப்பை ஏற்பது, மேலும் சத்தியம் செய்யக் கூடியவரின் சத்தியத்தை முழுமை செய்வது.

(2446) ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நம்பிக்கையாளர் மற்றொரு நம்பிக்கையாளருக்கு ஒரு பகுதி மற்றொரு பகுதியை வலிமைப்படுத்துகிற கட்டிடத்தைப் போன்றவர் ஆவார். (என்று கூறியவாறு விளக்கும் விதமாக) அன்னார் (ஸல்) ஒரு கரத்தின் விரல்களை மற்றொரு கரத்தின் விரல்களில் கோர்த்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மஸாலிம், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

## இந்த இதழில்

**மல்ஃபூஸாத் தஃப்ஸீரே கபீர்**

**ஹுஸூர்(அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை- (25.8.23)**

**அமைதியின் ஒரு கலங்கரை விளக்கம் பள்ளிவாயில்- ஹுஸூர் அன்வர் அவர்களின் சொற்பொழிவு**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களின் ஒளியில் இஸ்திஃக்ஃபார் மற்றும் தவ்பாவின் உண்மைத்தும் மற்றும் பயன்கள்**

**பாவத்திலிருந்து உண்மையான தவ்பா செய்பவர் பாவமே செய்யாதவரைப் போன்றவராவார் (நபிமொழி)**

**ஆன்மிக டம்பல் இஸ்திஃக்ஃபார் ஆகும்**
**அதன் மூலம் ஆன்மாவுக்கு ஓர் ஆற்றல் கிடைக்கிறது. உள்ளத்தில் உறுதித் தன்மை உருவாகிறது. எவருக்கு ஆற்றல் பெறுவது நோக்கமோ அவர் இஸ்திஃக்ஃபார் செய்யட்டும். ஆற்றல் பெற வேண்டுமென்றால் இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள்**

**இன்றைய நாட்களில் உலகில் போர் சூழல்கள் உள்ளன. இந்த நிலைமைகளில் உலகைப் பாதுகாப்பதற்காவும் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் அஹ்மதிகளான நாமும் மிக அதிகம் இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும்**
**இறைவனின் பாதுகாப்பு ஒருவருடன் இணைந்திருக்காமல் என்னைப் பெருந்துன்பம் பற்றிக் கொள்ளாது என்று எவராலும் கூற முடியாது; எவரும் நிம்மதியாக இருந்து விடவும் கூடாது. துயரங்களோ அறியாதிருக்கும் நிலையில் வந்து விடுகின்றன. இரவு என்ன நடக்கும்? என்று யாருக்குத் தெரியும்!**

**மதிப்பிற்குரிய ஆன்ஸா ஸாஹிபா, மதிப்பிற்குரிய புஷ்ரா அக்ரம் ஸாஹிபா, மதிப்பிற்குரிய முஸர்ரத் ஜஹான் ஸாஹிபா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த நாஸிர் அஹ்மத் குறைஷி ஆகியோரின் மரணத்தையொட்டி அவர்களின் நற்குறிப்புகளும் & காயிப் ஜனாஸா தொழுகையும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 ஆகஸ்ட் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஸுஹூர்** மாதம் **25ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ் பாவமன்னிப்பையும், தவ்பாவையும் ஏற்றுக் கொள்கிறான். அது உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். வெறும் வாயளவில் கூறப்படும் சொற்களாக இருக்கக் கூடாது. அல்லாஹ் திருக்குர்ஆனில் அவன் உண்மையான தவ்பா செய்பவர்களுக்கு செல்வத்தையும், சந்ததிகளையும் வழங்குகின்றான் என்ற விஷயத்தைப் பல்வேறு இடங்களில் கூறியுள்ளான்.

இறை தண்டனையில் இருந்து தப்பிப்பதற்கு இது ஒரு வழியாகும். இஸ்திக்ஃபார் செய்பவர் (பாவ மன்னிப்புக் கோருபவர்) அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பவர் ஆகின்றார். இஸ்திக்ஃபார் செய்பவர் அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பவர் ஆகின்றார். அல்லாஹ் இஸ்திக்ஃபார் செய்பவர்களுக்கு நற்செய்தி வழங்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றான்:

لَوَجَدُوا اللّٰهَ تَوَّابًا رَّحِيْمًا (4:65)

அதாவது, நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வை அதிகம் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாகவும், மீண்டும் மீண்டும் கருணை புரிபவனாகவும் காண்கின்றார்கள்.

ஆனால், உண்மையான இஸ்திக்ஃபார் ஆக இருக்க வேண்டும்; உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

ஒரு ஹதீஸில் வருகின்றது: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடமிருந்தான அறிவிப்பாகும். அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்: பாவத்திலிருந்து உண்மையான தவ்பா செய்பவர் பாவமே செய்யாதவரைப் போன்றவராவார். அல்லாஹ் ஒரு மனிதனை நேசிக்கும்போது பாவம் அவருக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. அதாவது, பாவத்தைத் தூண்டுபவை அவரைத் தீமையின் பக்கம் அழைத்துச் செல்ல முடியாது. தீமையின் விளைவுகளிலிருந்து அல்லாஹ் அவரைப் பாதுகாத்து வைக்கின்றான். பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்:

اِنَّ اللّٰهَ يُحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ

பொருள்: அல்லாஹ் தவ்பா செய்பவர்களையும், தூய்மையை மேற்கொள்பவர்களையும் நேசிக்கின்றான். (2:223)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தவ்பாவின் அடையாளம் என்ன? சரியான தவ்பா என்று எப்படித் தெரியும்? என்று பணிவுடன் கேட்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வெட்கி வருந்துதல் தவ்பாவின் அடையாளம் ஆகும். (கன்ஸுல் உம்மால், பாகம்-4, பக்கம்261, ஹதீஸ் எண்: 10428)

எனவே உண்மையான தவ்பா செய்பவர் உண்மையான முறையில் தவறுக்கு வருந்தி வெட்கப்பட்டு பாவங்களிலிருந்து தூய்மையாக இருக்கும் அதே வேளையில், அவருக்கு அல்லாஹ்வின் அன்பு கிடைக்கின்றது. அவர் அல்லாஹ்வின் கருணையில் இருந்து மீண்டும், மீண்டும் பங்கு பெறுகின்றார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் உண்மையான தவ்பா செய்பவர்களுக்கான நிபந்தனைகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். **முதல் நிபந்தனையாக** அன்னார் கூறியிருப்பதாவது, தவறான எண்ணங்களையும் தீய சிந்தனைகளையும் விட்டு விட வேண்டும். எனவே இன்பங்களுக்குக் காரணமாகக் கருதப்படும் தீய சிந்தனைகளை முழுமையாக விட்டு விட வேண்டும். இது மிகப் பெரிய ஜிஹாதாகும் (போராட்டமாகும்). அதை மனிதன் செய்ய வேண்டும். அப்போதுதான் தவ்பாவை நோக்கி அடி எடுத்து வைக்க முடியும்.

**இரண்டாவது நிபந்தனையாவது,** உண்மையாக வெட்கி தவறுக்கு வருந்த வேண்டும். இந்த இன்பங்களும் உலக சுகங்களும் தற்காலிகமானவை ; மனிதனின் வயது ஏற ஏற நாளுக்கு நாள் அவை குறைந்து கொண்டே செல்கின்றன. பிறகு, ஏன் மனிதன் அவற்றுடன் இணைந்திருக்க வேண்டும்? என்ற எண்ணம் (இருக்க) வேண்டும். எனவே இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர் தவ்பா செய்பவர், உண்மையாகத் தவறுக்கு வருந்துபவர் நற்பேறு பெற்றவர் ஆவர். இதுவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவுறுத்திய உண்மையான முறையில் வருந்துதல் ஆகும்.

**மூன்றாவது நிபந்தனையாவது,** அந்தத் தீமைக்கு அருகில் கூட செல்ல

மாட்டேன் என்று உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். தீமைகளுக்கு அருகில் செல்ல மாட்டேன் என்று உறுதி எடுத்துக் கொண்டேன்; அதுவே போதுமானது என்ற அளவு மட்டுமே நின்று விடக் கூடாது. இன்னும் கூறப்போனால், நல்லொழுக்கங்கள், மற்றும் தூய செயல்கள் அதன் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் உண்மையான தவ்பா ஆகும். இதுதான் தவறுக்கு உண்மையான வருந்துதல் ஆகும். இந்த நிலை ஏற்பட்டு விட்டால் பின்னர் அல்லாஹ் தன்னுடைய இத்தகைய அடியாரை நேசிக்கின்றான்.

(மல்ஃபூஸாத், தொகுதி-1, பக்கம் 138 -139, 1984-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பாவின் பக்கம் நமக்கு மீண்டும், மீண்டும் கவனமூட்டுகின்றார்கள். மனிதன் தவறுகள் செய்கின்றான். இந்தத் தவறுகள் மீண்டும், மீண்டும் செய்யப்படும் போது பின்னர் ஒன்றிற்குப் பிறகு மற்றொன்று என பாவத்தில் ஆழ்த்திக் கொண்டே செல்கின்றன. எனவே எந்நேரமும் அல்லாஹ்விடம் இஸ்திக்ஃபார் செய்தவாறு (பாவ மன்னிப்புக் கோரியவாறு) அல்லாஹ்வுக்கு முன் குனிந்த வண்ணம் நாம் நம்முடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ்வுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான உரிமையை செலுத்தாமல் ஒருபோதும் வீணடித்து விடக் கூடாது என்ற கவலையில் எப்போதும் மூழ்கியிருக்க வேண்டும். நான் கூறியது போன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு மீண்டும், மீண்டும் இஸ்திக்ஃபார் செய்வதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். அன்னாருக்கு எந்த அளவுக்குக் கவலை இருந்தது என்றால், அன்னார் ஜமாஅத்திற்கு இதன்பால் கவனமூட்டிராத எந்த சந்தர்ப்பமும் இல்லை. தம்முடைய சபைகளில், தம்முடைய நூல்களில் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள்.

எனவே அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகள் மற்றும் வழிகாட்டல்களின் ஒளியில் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களை எப்பொழுதும் முன்னிறுத்தி அவற்றின்படி செயல்படுதவற்கு முயற்சி செய்வது நமக்கு மிகவும் அவசியமாகும். அப்போதுதான் நாம் பைஅத்துக்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்கள் ஆக முடியும். நாம் நம்மிடம் தூய மாற்றத்தை உருவாக்கவில்லை என்றால் உண்மையான தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால் நாம் நம்மை சீர்திருத்திக் கொள்வதாக உறுதி எடுப்பது நமக்கு எந்தப் பலனையும் அளிக்காது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல இடங்களில் தவ்பாவைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்கள். சில மேற்கோள்களை முன் வைக்கின்றேன். இஸ்திஃக்ஃபார் (பாவமன்னிப்பு)செய்வதன் பலன் என்ன? என்பதை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

وَاَنِ اسۡتَغۡفِرُوۡا رَبَّكُمۡ ثُمَّ تُوۡبُوۡۤا اِلَيۡهِ

(ஹூத்:4)

நினைவிற் கொள்ளுங்கள். இந்த இரண்டு விஷயங்கள் இந்த சமுதாயத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. ஒன்று ஆற்றலைப் பெறுவதற்காக, மற்றொன்று பெறப்பட்ட ஆற்றலை செயல் ரீதியாக காட்டுவதற்காக, ஆற்றலைப் பெறுவதற்காக இஸ்திஃக்ஃபார் உள்ளது. அதை பிற சொற்களில் இஸ்திகாமத் மற்றும் இஸ்திஆனத் என்றும் கூறுவார்கள். அதாவது, அல்லாஹ்விடம் உதவி தேடுவது, ஸூஃபிமார்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: உடற்பயிற்சி செய்வதனால், உதாரணமாக பளு தூக்குவதனால், சுழற்றுவதனால் உடலின் ஆற்றல் மற்றும் வலிமை அதிகரிக்கின்றது. Weight lifting செய்பவர்கள்- பளு தூக்குபவர்கள் -dumbell தூக்குபவர்கள், பல்வேறு வகையான உடற்பயிற்சி செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உடற்பயிற்சி செய்வதால் எவ்வாறு உடல் ஆற்றல் அதிகரிக்கிறதோ அவ்வாறே ஆன்மிக டம்பல் இஸ்திஃக்ஃபார் ஆகும்.

அதனால் ஆன்மாவுக்கு ஓர் ஆற்றல் கிடைக்கிறது. உள்ளத்தில் உறுதித் தன்மை உருவாகிறது. எவருக்கு ஆற்றல் பெறுவது நோக்கமோ அவர் இஸ்திஃக்ஃபார் செய்யட்டும். ஆற்றல் பெற வேண்டுமென்றால் இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள். ஃகஃபர (எனும் வினைச் சொல்) மூடுவதற்கும், அமுக்குவதற்கும் கூறப்படுகிறது. இறைவனை அடையவிடாமல் தடுக்கக் கூடிய இச்சைகளையும் எண்ணங்களையும் மூடுவதற்கும் அமுக்குவதற்கும் இஸ்திஃக்ஃபார் மூலம் மனிதன் முயற்சி செய்கிறான். எனவே தாக்குதல் தொடுத்து மனிதனை அழிக்க நினைக்கும் விஷமானவற்றின் மீது மேலோங்குவது மற்றும் இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றும் வழிகளில் உள்ள தடைகளிலிருந்து தப்பித்து, அவற்றை செய்து காட்டுவதுதான் இஸ்திஃக்ஃபார் என்பதற்குப் பொருள் ஆகும்.

இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அல்லாஹ் மனிதனிடம் இரண்டு வகையான தன்மைகளை வைத்துள்ளான். ஒன்று நச்சுத் தன்மை, அதாவது விஷத் தன்மை, அதைத் தூண்டுபவன் ஷைத்தான் ஆவான். இரண்டாவது, விஷமுறிவுத் தன்மை, மனிதன் ஆணவம் கொள்ளும்போது தன்னை ஒரு பொருட்டாகக் கருதும்போது, விஷமுறிவு எனும் நீருற்றில் இருந்து உதவி பெறாதபோது நச்சாற்றல் மேலோங்கிவிடுகின்றது; விஷத் தன்மை மேலோங்கி விடுகின்றது.

ஆனால், தன்னைத் தாழ்ந்தவனாகவும், எளியவனாகவும் கருதும்போது தன்னிடம் அல்லாஹ்வின் உதவியின் தேவையை உணரும்போது அச்சமயம் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு நீரூற்று உருவாகி விடுகின்றது. அதன் மூலம் அவரது ஆன்மா உருகி ஓட ஆரம்பிக்கிறது. இதுவே இஸ்திஃக்ஃபார் என்பதற்குப் பொருள் ஆகும். அதாவது, அந்த ஆற்றலைப் பெற்று விஷத்தன்மையின் மீது மேலோங்கி விட வேண்டும். இதுதான் உண்மையான இஸ்திஃக்ஃபார் (பாவ மன்னிப்பு) ஆகும்.

சுருங்கக்கூறின், இதன் பொருள் இறைவணக்கத்தில் இவ்வாறு நிலைத்திருங்கள் என்பதாகும். முதலாவது தூதருக்குக் கட்டுப்படுதல் இரண்டாவது எந்நேரமும் அல்லாஹ்விடம் உதவி தேடுதல். ஆம். முதலில் உங்கள் இறைவனிடம் உதவி தேடுங்கள். ஆற்றல் கிடைத்த பிறகு تُوۡبُوۡۤا اِلَيۡهِ அதாவது, இறைவன் பக்கம் திரும்புங்கள்.

அல்லாஹ்விடம் உதவி தேடுவதும் அவனிடம் துஆ கேட்பதும் அவசியம் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2,பக்கம் 67 - 68)

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மனிதன் தன் இயல்பில் மிகவும் பலவீனமானவன் என்பது வெளிப்படை. இறைவனின் நூற்றுக் கணக்கான கட்டளைகள் எனும் சுமை அவன் மீது சுமத்தப்பட்டுள்ளது. மனிதன் பலவீனமானவன். அல்லாஹ் பல கட்டளைகளை வழங்கியுள்ளான். எனவே, மனிதன் தனது பலவீனத்தின் காரணமாக சில கட்டளைகளை நிறைவேற்ற இயலாமல் இருப்பது என்ற விஷயம் அவனது இயல்பில் அடங்கியுள்ளது.

இது இயற்கையான விஷயம் ஆகும். இவ்வளவு கட்டளைகள் உள்ளன. எல்லாக் கட்டளைகளையும் நிவேற்ற முடியாமல் போகலாம். சிலவேளை அதிகமாகக் கட்டளையிடக் கூடிய ஆன்மாவின் சில ஆசைகள் அவன் மீது மேலோங்கி விடுகின்றன. எனவே, அவன் ஏதாவது சறுக்கலின்போது தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்தால் தன் இயல்பின் பலவீனத்தின் ரீதியில் இறைவனின் கருணை அவனை அழிவதிலிருந்து காப்பாற்றுவதற்கான உரிமை அவனுக்கு உள்ளது.

உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும். மனிதனின் இயல்பில் வைக்கப்பட்டுள்ள இந்த பலவீனத்தின் காரணமாக அல்லாஹ் அவனது உண்மையான தவ்பாவை ஏற்றுக் கொண்டு அவனைக் காப்பாற்றி விடுவதற்கான உரிமை அவனுக்கு இருக்கிறது. எனவே இறைவன் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாக இல்லாமல் இருந்திருந்தால் நூற்றுக்கணக்கான கட்டளைகள் எனும் இந்த சுமை மனிதன் மீது ஒருபோதும் சுமத்தப்பட்டிருக்காது என்பது உறுதியான விஷயம் ஆகும்.

இறைவன் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாகவும், அதிகம் மன்னிப்பவனாகவும் இருக்கிறான் என்பது இதிலிருந்து ஐயமின்றி நிரூபணமாகிறது. **தவ்பா என்பதன் பொருள், மனிதன் இதற்குப் பிறகு தான் நெருப்பில் வீசப்பட்டாலும் சரி, இந்தத் தீமையை ஒருபோதும் செய்ய மாட்டான் என்ற உறுதி எடுத்தவாறு ஒரு தீமையை விட வேண்டும். ஆக, இது நிபந்தனை ஆகும். இத்தகைய தவ்பா செய்யப்பட வேண்டும்.**

மனிதன் இந்த உண்மைத்துவம் மற்றும் வலிமையான மனஉறுதியுடன் இறைவன் பக்கம் திரும்பும் போது இறைவன் தன் இயல்பில் பரிவுள்ளவனும் கருணையாளனும் ஆவான். அவன் அந்தப் பாவத்தின் தண்டனையை மன்னித்து விடுகிறான். தவ்பாவை ஏற்றுக் கொண்டு

அழிவிலிருந்து காப்பாற்றி விடுவது இறைவனின் உயர்ப் பண்புகளில் ஒன்றாகும். மனிதனுக்குத் தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நம்பிக்கை இல்லையென்றால் பின்னர் அவன் பாவத்திலிருந்து திருந்தி வர மாட்டான்.

தவ்பா ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கையே இல்லையெனில், பின்னர் அவன் பாவம் செய்து கொண்டே செல்வான். முடிவே இப்படி நிகழவிருக்கும்போது பிறகு என்ன பலன் என்று பலர் கேள்வி கேட்கின்றனர். இல்லை, முடிவு நேரத்திற்கு முன்னர் தவ்பா செய்தீர்கள் என்றால் அல்லாஹ் காப்பாற்றி விடுகிறான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: கிறிஸ்தவ மதமும் தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை ஒப்புக் கொள்கிறது. ஆனால், தவ்பாவை ஏற்பவர் கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் (ஒப்புக் கொள்கிறது). ஆனால், இஸ்லாத்தில் தவ்பா செய்வதற்கு எந்த மதத்தின் நிபந்தனையும் இல்லை. எந்த மதத்தைப் பின்பற்றியும் தவ்பா ஏற்றுக் கொள்ளப்படலாம். ஒருவர் இறைவனின் மறை மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களை நிராகரிக்கக் கூடிய அந்தப் பாவம் மட்டும் எஞ்சியிருந்து விடுகிறது. மனிதன் தன்னுடைய செயல்களால் மட்டுமே ஈடேற்றம் அடைந்து விடுவது என்பது முற்றிலும் அசாத்தியமான விஷயம் ஆகும். மாறாக, இது இறைவனின் பேரருள் ஆகும். அதாவது, அவன் சிலரது தவ்பாவை ஏற்றுக் கொள்கிறான். சிலருக்குத் தனது அருளால் எத்தகைய ஆற்றலை வழங்குகின்றான் எனில் அவர் பாவத்தை விட்டும் பாதுகாப்பாக இருக்கிறார்.(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம்-189,190)

ஒரு நபர் அன்னாரது சபைக்கு வந்தார். அவர் நான் என்ன திக்ர் செய்யட்டும்? என்று கேட்டார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அதிகம் இஸ்திஃக்ஃபார் செய்வீராக. மனிதனுக்கு இரண்டே நிலைகள் உள்ளன. ஒன்று அவர் பாவம் செய்யாமல் இருப்பார் அல்லது அல்லாஹ் அந்தப் பாவத்தின் தீய விளைவுகளிலிருந்து (அவரைக்) காப்பாற்றி விடுவான். எனவே, இஸ்திஃக்ஃபார் ஓதும்போது இரண்டு பொருள்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவர் பாவமும் செய்யக் கூடாது. பாவத்தின் தீய விளைவுகளும் வெளிப்படக் கூடாது. அல்லாஹ் அவரை மன்னித்து விட வேண்டும். மீண்டும் ஒருபோதும் அவர் பாவம் செய்யக் கூடாது.

இதை முன்னிறுத்தியவாறு இஸ்திஃக்ஃபார் ஓத வேண்டும். ஒன்று, அல்லாஹ்விடம் முந்தைய பாவங்களின் திரையிடுதலை வேண்ட வேண்டும். இரண்டாவது, வருங்காலத்தில் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு இறைவனிடம் நல்வாய்ப்பு வேண்ட வேண்டும். ஆனால், இஸ்திஃக்ஃபார் வெறும் நாவால் முழுமை அடைவதில்லை. மாறாக, உள்ளத்தால் (பாவ மன்னிப்பு) வேண்ட வேண்டும். தொழுகையில் தமது மொழியிலும் துஆ கேட்க வேண்டும். இது அவசியம் ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் -320, 1984-ம் ஆண்டு பதிப்பு)

நிகழ்ந்துவிட்ட அந்தத் தவறுகளின் பக்கம் இனி மீண்டும் மனிதன் ஒருபோதும் செல்ல மாட்டான் என்று நிரூபிக்க முயற்சி செய்யாத வரை அஸ்தஃக்ஃபிருல்லாஹ்! இனி வருங்காலத்தில் தவறுகள் நிகழாது என்று வெறும் வாயால் இஸ்திஃக்ஃபார் செய்து விடுவது அல்லது أَسْتَغْفِرُ اللّٰهَ என்று எழுதிவிடுவது; இதனால் எந்தப் பலனும் இல்லை.

இஸ்திஃக்ஃபார் (பாவ மன்னிப்பு) என்பதன் பொருளைப் புரிய வைத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: இஸ்திஃக்ஃபார் என்பதற்குப் பொருளில் வெளிப்படையில் எந்தப் பாவமும் வெளிப்படக் கூடாது; பாவங்கள் செய்யும் ஆற்றல் வெளிப்படக் கூடாது என்பதே ஆகும். நபிமார்களின் இஸ்திஃக்ஃபார் செய்தலின் உண்மைத்துவம் இதுவே ஆகும்.

அவர்கள் குற்றமற்றவர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வருங்காலத்தில் அந்த ஆற்றல்கள் வெளிப்படக் கூடாது என்பதற்காக இஸ்திஃக்ஃபார் செய்கிறார்கள். பொதுமக்கள் செய்கின்ற இஸ்திஃக்ஃபார் என்பதற்கு வேறு பொருள்களும் எடுத்துக் கொள்ளப்படும். அதாவது, எந்தக் குற்றங்கள் மற்றும் பாவங்கள் நிகழ்ந்து விட்டனவோ அவற்றின் தீய விளைவுகளில் இருந்து அல்லாஹ் காப்பாற்றி வைப்பானாக. மேலும், அந்தப் பாவங்களை மன்னித்தருள்வானாக. அத்துடன் இனி வரும் காலத்தில் பாவங்களிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! என்பதாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எவ்வாறு இருப்பினும், இஸ்திஃக்ஃபார் செய்வதில் எந்நேரமும் மூழ்கியிருப்பது மனிதனுக்கு அவசியமான விஷயம் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: பஞ்சத்தின் வடிவில் அல்லது வேறு ஏதாவது வடிவில் இந்தப் பெருந்துயரங்கள் வருகின்றனவே, இவற்றின் பொருளே மக்கள் இஸ்திஃக்ஃபார் செய்வதில் மூழ்கி இருக்க வேண்டும் என்பதுதான்.

இன்றைய நாட்களில் உலகில் போர் சூழல்கள் உள்ளன. இந்த நிலைமைகளில் உலகைப் பாதுகாத்து வைப்பதற்காவும், நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் அஹ்மதிகளான நாமும் மிக அதிகம் இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஆனால், இஸ்திஃக்ஃபார் என்பதற்கு அஸ்தஃக்ஃபிருல்லாஹ் அஸ்தஃக்ஃபிருல்லாஹ் என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. உண்மையில், அந்நிய நாட்டின் மொழியாக இருப்பதனால் மக்களுக்கு உண்மை மறைந்துள்ளது. அரபு மக்கள் இந்த விஷயங்களை மிக நன்றாகப் புரிந்திருந்தார்கள். ஆனால், நமது நாட்டில் அந்நிய மொழியின் காரணமாக பல உண்மைத்துவங்கள் மறைந்திருந்தன.

பல மக்கள் நாங்கள் இத்தனை முறை இஸ்திஃக்ஃபார் செய்தோம் என்று கூறுகிறார்கள். நூறு முறை தஸ்பீஹ் ஓதினோம்; ஆயிரம் முறை தஸ்பீஹ் ஓதினோம் என்கிறார்கள். ஆனால், இஸ்திஃக்ஃபார் என்பதன் அர்த்தத்தை, பொருளைக் கேட்டால் ஒன்றும் தெரிவதில்லை. திகைத்துப் போய் விடுவார்கள். மனிதன் உண்மையான முறையில் உள்ளத்திலேயே தன்னிடம் நிகழ்ந்து விட்ட அந்தக் குற்றங்கள் மற்றும் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டியது வரக் கூடது என்று மன்னிப்புக் கோரிக் கொண்டிருக்க வேண்டும். மேலும், இனி நற்செயல் செய்ய நல்வாய்ப்பு வழங்குவாயாக. தீமையில் இருந்து பாதுகாத்து வைப்பாயாக என்று வருங்காலத்தில் உள்ளத்தால் எந்நேரமும் இறைவனிடம் உதவிக் கோரிக் கொண்டே இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: சொற்களால் எந்த வேலையும் நடக்காது என்பதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். இறைவன் முந்தைய பாவங்களை மன்னித்து விட வேண்டும் என்றும், இனி பாவங்களிலிருந்து பாதுகாத்து வைக்க வேண்டும் என்றும், நற்செயல் செய்ய நல்வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் தாய்மொழியிலும் இஸ்திஃக்ஃபார் செய்யலாம். மேலும், இதுவே உண்மையான இஸ்திஃக்ஃபார் ஆகும்.

உள்ளத்திற்கே தெரியாமல் வெறுமனே நாவளவில் அஸ்தஃக்ஃபிருல்லாஹ் என்று கூறிக் கொண்டு திரிவதற்கு எந்த அவசியமும் இல்லை.

நினைவிற் கொள்ளுங்கள்! உள்ளத்தில் இருந்து எழுவதுதான் இறைவன் வரை சென்றடைகிறது. தமது மொழியிலேயே இறைவனிடம் துஆ கேட்க வேண்டும். அதனால் உள்ளத்திலும் தாக்கம் ஏற்படுகிறது. நாவோ உள்ளத்திற்கு சான்று மட்டுமே பகர்கிறது. உள்ளத்தில் உத்வேகம் ஏற்பட்டால், நாவும் உடன் இணைந்து விட்டால் நல்ல விஷயம் ஆகும்.

உள்ளம் இல்லாமல் வெறும் நாவளவிலான துஆக்கள் பயனற்றவை ; வீணானவையாகும். எனினும், உள்ளத்தின் துஆக்கள் அசல் துஆக்கள் ஆகும். பெரும் இன்னல் வரும் நேரத்திற்கு முன்னர் மனிதன் தன் உள்ளத்துக்குள்ளேயே அல்லாஹ்விடம் துஆக்கள் கேட்டுக் கொண்டிருந்தால் இஸ்திஃக்ஃபார் செய்து கொண்டே இருந்தால் பின்னர் கருணையாளனும், பரிவு மிக்கவனும் ஆன அந்த இறைவனால் அந்த பெருந்துன்பம் அகன்று விடுகிறது. ஆனால், பெருந்துன்பம் வந்து விடும்போது அது அகன்று போவதில்லை.

பெரும் இன்னல் வரும் முன் துஆக்கள் செய்து கொண்டே இருக்க வேண்டும். அதிகம் இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும். இவ்வாறு அல்லாஹ் பெரும் இன்னல் வரும்போது பாதுகாத்து வைக்கிறான். நமது ஜமாஅத் ஏதாவது தனிச் சிறப்பான விஷயத்தைக் காட்டவும் வேண்டும். ஒருவர் பைஅத் செய்து செல்கிறார்; ஆனால், எந்தத் தனிச் சிறப்பான விஷயத்தையும் வெளிப்படுத்தவில்லை என்றால், மனைவியுடன் முன்னர் நடந்து கொண்டது போன்றே நடந்து கொள்கிறார் என்றால் தமது மனைவி மக்களுடன் முன்பிருந்தது போன்றே நடந்து கொள்கிறார்

என்றால் இது நல்ல விஷயம் இல்லை.

பைஅத் செய்த பிறகும் அதே தீய ஒழுக்கம், தீய முறையில் நடந்து கொள்வது போன்றவை இருக்கின்றது என்றால், மேலும் முன்பிருந்த அதே நிலை நீடித்தால் பிறகு பைஅத் செய்ததன் பலன் என்ன? பைஅத் செய்த பிறகு அந்நியர்களுக்கும் தம்முடைய உறவினர்கள் மற்றும் அண்டை அயலாருக்கும் கூட எப்படிப்பட்ட முன்மாதிரியாகத் திகழ்ந்து காட்ட வேண்டும் என்றால், இப்போது இவர் முன்பிருந்தவர் அல்ல என்று அவர்கள் கூற வேண்டும். இதுவே உண்மையான இஸ்திஃக்ஃபார் செய்வதன் விளைவாக இருக்க வேண்டும்.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! தூய்மையாளராகி அமல் செய்வீர்களாயின் , உங்கள் மீதான மதிப்பச்சம் மற்றவர்களுக்குக் கண்டிப்பாக ஏற்படும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான மதிப்பச்சம் எவ்வளவு பெரியதாக இருந்தது! ஒருமுறை, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தண்டனைக்கான துஆ செய்து விடுவார்களோ என்று நிராகரிப்பாளர்களுக்கு ஐயம் ஏற்பட்டது. எனவே அந்த நிராகரிப்பாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வந்து, ஹுஸுர்! தண்டனைக்கான துஆ செய்து விடாதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். உண்மையான மனிதர் மீது கண்டிப்பாக மதிப்பச்சம் ஏற்படுகின்றது. முற்றிலும் தூயவராகி அமல் செய்ய வேண்டும். இறைவனுக்காக செய்ய வேண்டும். அப்போது நிச்சயமாக உங்கள் தாக்கமும் உங்கள் மீதான மதிப்பச்சமும் மற்றவர்களுக்கு ஏற்படும்.(மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 372, 1984-ம் ஆண்டு பதிப்பு)

பிறகு, ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: இறைவனுக்கு அஞ்சுவதும் இறையச்சமுடையவராக ஆகுவதும் மிகப் பெரிய விஷயம் ஆகும். இறைவன் அதன் மூலமாக ஆயிரம் துன்பங்களிலிருந்து காப்பாற்றி விடுகிறான். இறைவனின் பாதுகாப்பு ஒருவருடன் இணைந்திருக்காமல் என்னைப் பெருந்துன்பம் பற்றிக் கொள்ளாது என்று எவராலும் கூற முடியாது; எவரும் நிம்மதியாக இருந்து விடவும் கூடாது. துயரங்களோ அறியாதிருக்கும் நிலையில் வந்து விடுகின்றன. இரவு என்ன நடக்கும்? என்று யாருக்குத் தெரியும்!

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். முதலில் மிகவும் அழுதார்கள். பிறகு, மக்களைப் பார்த்துக் கூறினார்கள்: அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். துன்பங்களும் பேராபத்துகளும் எறும்புகளைப் போன்று மனிதனுடன் இணைந்திருக்கின்றன. உண்மையான உள்ளத்துடன் தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்வதில் மூழ்கியிருப்பதைத் தவிர்த்து அவற்றிலிருந்து தப்பிப்பதற்கான (வேறு) எந்த வழியுமில்லை.

பிறகு, இஸ்திஃக்ஃபார் உடைய பொருள் என்ன? என்று மேற்கொண்டு விளக்கிக் கூறுகிறார்கள்: தம்முடைய முந்தைய பாவங்கள் மற்றும் குற்றங்களுக்காக இறைவனிடம் பாதுகாப்புத் தேடுவது இனி பாவங்கள் வெளிப்படுவதை விட்டும் பாதுகாப்புத் தேடுவது ஆகும். நபிமார்களும் இஸ்திஃக்ஃபார் செய்து வந்தார்கள். மேலும் பொது மக்களும் இஸ்திஃக்ஃபார் செய்து வந்தனர். அறியாத பாதிரியார்கள் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த இஸ்திஃக்ஃபார் மீது ஆட்சேபனை இவ்வாறு செய்துள்ளனர்; அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்து வந்தார்கள். இதன் பொருள் குற்றம் செய்தவராக இருந்தார்கள். நவூதுபில்லாஹ் (அவ்வாறு கூறுவதை விட்டும் நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்)

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்ததனால் அன்னார் குற்றம் புரிந்தவராக இருந்தார்கள் என்பது நிரூபணமாகிறது என்று எழுதப்பட்டுள்ளது. நவூதுபில்லாஹ். இஸ்திஃக்ஃபார் என்பதோ ஓர் உயர்ந்த பண்பாகும் என்பதை இந்த அறிவீனர்கள் புரிவதில்லை. மனிதன் இயல்பாகவே,பலவீனமும் ஆற்றல் குறைவும் அவனது இயல்பின் தேட்டமாக இருக்கும் வண்ணம் உருவாகியுள்ளான்.

நபிமார்கள் இந்த இயல்பான ஆற்றல் குறைவையும், மனித பலவீனத்தையும் நன்கு அறிவார்கள். எனவே அவர்கள் இவ்வாறு துஆ செய்கின்றார்கள்: இறைவா! அந்த மனித பலவீனங்கள் வெளிப்படாமலேயே போகும் வகையில் நீ எங்களைப் பாதுகாப்பாயாக! ஃகஃபர (எனும் வினைச் சொல் ஒன்றை) மூடுவதற்காகக் கூறப்படுகிறது. உண்மையான விஷயம் என்னவென்றால், எந்த ஆற்றல் இறைவனிடம் இருக்கிறதோ அது எந்த நபியிடமும், இறைநேசரிடமும், இறைத் தூதரிடமும் இல்லை. என்னால் எனது ஆற்றலால் பாவங்களிலிருந்து தப்பிக்க முடியும் என்று எவரும் வாதிட முடியாது. எனவே நபிமார்களும் பாதுகாப்பிற்காக இறைவனின் தேவையுடையவர்கள் ஆவர். எனவே அடியார் என்பதை வெளிப்படுத்துவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஏனைய நபிமார்களைப் போன்று தமது பாதுகாப்பை அல்லாஹ்விடம் வேண்டி வந்தார்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்து வரவில்லை என்று கூறும் அந்தக் கிறிஸ்தவர்களின் எண்ணம் தவறானது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இஸ்திஃக்ஃபார் செய்து வரவில்லை என்ற அவர்களின் எண்ணம் தவறானது. இது அவர்களின் அறியாமையும், பேதமையும் ஆகும். இவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள். இன்ஜீலை ஆழ்ந்து பார்ப்பதன் மூலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஆங்காங்கே தம்முடைய பலவீனங்களை ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதும் இஸ்திஃக்ஃபாரும் செய்துள்ளார்கள் என்பதும் தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இருக்கட்டும்! ஏலீ ஏலீ லிமா ஸபக்தானீ (என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்?) என்பதன் பொருள் என்ன? என்று கூறுங்களேன்! அபீ! அபீ! (என் பிதாவே! என் பிதாவே!) என்று ஏன் அழைக்கவில்லை? எபிரேயே மொழியில் ஏல் எனும் சொல் இறைவனுக்காகக் கூறப்படுகிறது. இதற்கு கருணை புரிவாயாக! அருள் புரிவாயாக! என்னை இவ்வாறு உதவியற்றவனாகவிட்டு விடாதிருப்பாயாக!என்னைப் பாதுகாப்பாயாக! என்பதே பொருள் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: உண்மையில், சிரமம் என்னவென்றால் இந்தியாவில் மொழி மாறுபடுவதன் காரணமாக இஸ்திஃக்ஃபார் உடைய அசல் நோக்கமே மறைந்த போய் விட்டது. இந்த துஆக்களை ஒரு மந்திரமாகக் கருதிக் கொண்டார்கள். தொழுகை என்ன! இஸ்திஃக்ஃபார் என்ன! தவ்பா என்ன! ஒருவரிடம் இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள் என்று அறிவுரை கூறினால் அவர் நானோ நூறு முறை,இருநூறு முறை இஸ்திஃக்ஃபார் செய்கின்றேனே! என்று பதில் அளிக்கிறார். ஆனால், பொருள் கேட்டால் ஒன்றும் அறிந்திருப்பதில்லை.

இஸ்திஃக்ஃபார் என்பது ஓர் அரபுச் சொல் ஆகும். இதன் பொருள் பாவமன்னிப்புக் கோருவதாகும். அதாவது, எங்கள் இறைவா! எங்களிடம் முன்னர் நிகழ்ந்துவிட்ட பாவங்களின் தீய விளைவுகளிலிருந்து எங்களைப் பாதுகாப்பாயாக! ஏனெனில், பாவம் ஒரு விஷம் ஆகும். அதன் விளைவும் கண்டிப்பாக வெளிப்படும். இனி எங்களிடமிருந்து பாவமே நிகழாத வண்ணம் எங்களைப் பாதுகாப்பாயாக!

தவ்பா என்பதன் பொருள் தவறுக்கு வருந்தி வெட்கம் கொண்டு ஒரு தீய செயலை விட்டு மனம் திரும்புவது. தவ்பா என்பது ஒரு தீய செயல் ஒன்றும் அல்ல. மாறாக, தவ்பா செய்பவர் அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானவராக இருக்கின்றார் என்று எழுதப்பட்டுள்ளது. இறைவனின் பெயரும் தவ்வாப் என்பதாகும். இதன் பொருளாவது மனிதன் தம்முடைய பாவங்கள் மற்றும் தீய செயல்களால் வெட்கி தலை குனியும்போது இனி அந்தத் தீய செயலில் இருந்து விலகி இருப்பதற்கான உறுதி எடுக்கும்போது அல்லாஹ்வும் அவன் பக்கம் கருணையுடன் திரும்புகிறான். மனிதன் தவ்பா செய்வதை விட அதிகம் இறைவன் அவன் பக்கம் திரும்புகிறான்.

ஆக, ஹதீஸ் ஷரீஃபில் வருகிறது. மனிதன் இறைவனை நோக்கி ஒரு சாண் அளவுக்கு சென்றால் இறைவன் அவன் பக்கம் ஒரு முழம் அளவுக்கு வருகின்றான். மனிதன் நடந்து சென்றால் இறைவன் ஓடி வருகின்றான். அதாவது மனிதன் இறைவன்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பக்கம் கவனம் செலுத்தினால் அல்லாஹ்வும் கருணை, அருள் மற்றும் பாவ மன்னிப்பு ஆகியவற்றில் அளவற்ற முறையில் அவன் மீது அருள்பாலிக்கின்றான். ஆனால், இறைவனை விட்டு முகந்திருப்பிக் கொண்டு அமர்ந்து விட்டால் இறைவன் ஏன் பொருட்படுத்த வேண்டும்?(மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம்-336,337)

இஸ்திஃக்ஃபார் உடைய உண்மைத்துவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறினார்கள்: அறிந்து கொள்ள வேண்டும்! திருக்குர்ஆன் அல்லாஹ்வின் இரண்டு பெயர்களை முன்வைத்துள்ளது. அல் ஹய்யூ மற்றும் அல் கய்யூம். அல் ஹய்யூ என்பதன் பொருள் அல்லாஹ் உயிருள்ளவனும், மற்றவர்களுக்கு வாழ்வளிப்பவனும் ஆவான் என்பதாகும். மேலும், அல் கய்யூம் என்பதன் பொருள் தான் நிலைத்திருப்பவனும் மற்றவர்கள் நிலைத்திருப்பதற்கான உண்மைக் காரணமும் ஆவான் என்பதாகும். ஒவ்வொன்றின் அக, புற நிலைத்திருத்தல் மற்றும் வாழ்வு இவ்விரு பண்புகள் மூலமே இருக்கின்றன.

எனவே ஹய்யு என்ற சொல் அவன் வணங்கப்பட வேண்டும் என்பதை விரும்புகிறது. இது சூரா ஃபாத்திஹாவில் இய்யா(க்)க நஃபுது என்பதன் மூலம் வெளிப்படுகிறது. அல் கய்யூம் எனும் சொல் அவனிடம் உதவி தேடப்பட வேண்டும் என்பதை விரும்புகிறது. இது إِيَّاكَ نَسْتَعِينُ எனும் சொற்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஹய்யு என்ற சொல் அவன் வணங்கப்பட வேண்டும் என்பதை விரும்புகின்றது. ஏனெனில் அவன் படைத்தான்; பிறகு படைத்து விட்டு விட்டுவிடவில்லை.

உதாரணமாக, (கட்டடம் அமைக்கக் கூடியவரான) கட்டடக் கலைஞர் மரணித்து விடுவதனால் கட்டடத்துக்கு எந்தக் குறையும் ஏற்படுவதில்லை. ஆனால், மனிதனுக்கு இறைவனின் தேவை எந்நேரமும் இணைந்திருக்கிறது. எனவே இறைவனிடம் ஆற்றலை வேண்டிக் கொண்டே இருக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், இதுவே இஸ்திக்ஃபார் ஆகும். இஸ்திஃக்ஃபார் என்பதன் அசல் உண்மைத்துவம் இதுவாகும். பின்னர், அதை விசாலப்படுத்தி பாவம் செய்யக் கூடிய அந்த மக்களுக்காக அவற்றின் தீய விளைவுகளில் இருந்து பாதுகாத்து வைப்பது என்ற வகையில் வைக்கப்பட்டது.

பாவம் செய்யவில்லை என்றாலும் உயிருடன் இருப்பதற்கும் இஸ்திஃக்ஃபார் அவசியம் ஆகும். அல்லாஹ்வின் அடைக்கலத்தில் இருப்பதற்கும் அவசியம் ஆகும். ஆனால், மனித பலவீனங்களில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதே அசல் விஷயம் ஆகும். ஆக, மனிதனாக இருந்து கொண்டு இஸ்திஃக்ஃபார் செய்வதன் தேவையைப் புரியாதவன் பண்பற்ற இறை மறுப்பாளன் ஆவான்.(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 217,1984-ம் ஆண்டு பதிப்பு)

பின்னர், ஓரிடத்தில் இஸ்திஃக்ஃபார் உடைய உண்மைத்துவத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: பாவம் என்பது மனிதனின் ரத்தத்தில் கலந்துள்ள கிருமியாகும். ஆனால், அதற்கான சிகிச்சை இஸ்திஃக்ஃபார் மூலமே செய்யப்பட முடியும். இஸ்திஃக்ஃபார் என்றால் என்ன?

நிகழ்ந்துவிட்ட பாவங்களின் தீய விளைவுகளில் இருந்து இறைவன் பாதுகாத்து வைக்க வேண்டும். மேலும் எவை இது வரை நிகழவில்லையோ ஆனால், மனிதனிடம் ஆற்றலாக இருக்கின்றனவோ அவை வெளிப்படுவதற்கான நேரமே வரக் கூடாது; உள்ளுக்குள்ளேயே அவை எரிந்து சாம்பல் ஆகிவிட வேண்டும் என்பதே (இஸ்திஃக்ஃபார் எனப்படுகிறது).

இந்தக் காலம் மிகவும் அச்சத்திற்குரியது ஆகும். எனவே தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்வதில் மூழ்கியிருங்கள். நாம் கடந்து செல்லும் இந்தக் காலம் மிகவும் அஞ்ச வேண்டியதாகும். தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்வதில் மூழ்கியிருங்கள். உங்கள் ஆன்மாவைப் படித்துக் கொண்டே இருங்கள். ஒவ்வொரு மதத்தையும் சமயத்தையும் சார்ந்தவர்கள் மற்றும் வேதத்தை உடையவர்கள் தான தர்மங்களால் தண்டனை அகன்று விடுகிறது என்பதை ஏற்கின்றார்கள். ஆயினும், தண்டனை இறங்குவதற்கு முன்பு விலகுகின்றது. ஆனால் (தண்டனை) இறங்கிய பிறகு ஒருபோதும் விலகுவதில்லை.(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் - 299,1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே நீங்கள் இப்போதிருந்தே இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள். மேலும், தவ்பா செய்வதில் ஈடுபட்டு விடுங்கள். அப்போதுதான் உங்கள் முறையே வராது. அல்லாஹ் உங்களைப் பாதுகாப்பான். எனவே, நான் முன்னரும் கூறியது போன்று இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகளையும் முன்னிறுத்தி நாம் மிகவும் இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை எல்லா விதமான தீங்குகள் மற்றும் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றுவானாக.

தவ்பாவின் உண்மைத்துவத்தின் மேற்கொண்ட விளக்கத்தை ஓரிடத்தில் அன்னார் (அலை) இவ்வாறு கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நினைவிருக்கட்டும்! தவ்பா மற்றும் பாவமன்னிப்பை மறுப்பது என்பது உண்மையில் மனித முன்னேற்றத்திற்கான கதவுகளை அடைப்பதாகும். தவ்பாவின் உண்மைத்துவத்தை மறுப்பவர் முன்னேற்றத்திற்கான கதவுகளை அடைக்கிறார். ஏனெனில், மனிதன் தன்னளவில் முழுமையானவன் இல்லை என்பது அனைவருக்கும் தெள்ளத் தெளிவாகத் தெரியும். அதாவது, முழுவதுமாக தன்னளவில் முற்றிலும் முழுமையானவன் கிடையாது. மாறாக, முழுமை அடைதலின் தேவையுடையவனாக இருக்கின்றான்.

எவ்வாறு அவன் வெளிப்படையான நிலையில் பிறந்து மெதுமெதுவாக தனது அறிவை விரிவுபடுத்துகிறானோ பிறக்கும் போதே அறிஞனாக பிறந்து விடுவதில்லையோ அவ்வாறே அவன் பிறந்து நினைவு தெரியத் துவங்கும் போது அவனது ஒழுக்க நிலை மிகவும் தாழ்ந்திருக்கும். எனவே ஒருவர் சிறுவயது பிள்ளைகளின் நிலைமைகளை உன்னிப்பாக கவனித்தால் அவருக்கு இந்த விஷயம் தெரிய வரும். அதாவது, பெரும்பாலான குழந்தைகள் சிறுசிறு சண்டைகளில் மற்ற குழந்தைகளை அடிப்பதில் ஆர்வமாக இருப்பார்கள். குழந்தைகளுக்கிடையில் சண்டைகள் நடக்கும். பெரும்பாலும் வார்த்தைக்கு வார்த்தை பொய் பேசுதல், மற்ற குழந்தைகளை ஏசுதல் போன்ற பண்புகள் அவர்களிடமிருந்து வெளிப்படுவதுண்டு. சிலருக்குத் திருட்டு, புறங்கூறுதல், பொறாமை மற்றும் கருமித்தனம் ஆகியவற்றின் பழக்கமும் இருப்பதுண்டு. பிறகு, இளமை மயக்கம் பெருக்கெடுக்கும் பொழுது அதிகமாகக் கட்டளையிடக் கூடிய ஆன்மா இவர்கள் மீது வந்து விடுகிறது. மேலும் பெரும்பாலும் எத்தகைய தகுதியற்ற, சொல்ல முடியாத செயல்கள் அவர்களிடம் நிகழ்ந்து விடுகின்றன என்றால் அவை தெள்ளத் தெளிவான முறையில் தீமையைச் சேர்ந்தவையாக இருக்கும்.

சுருக்கமாகக் கூறின் பெரும்பாலான மனிதர்களுக்கு முதல் கட்டம் அசுத்தமான வாழ்வினையுடையதாகும். சுற்றுச் சூழல் சமூகம் அவர்களை அசுத்தமானவர்களாக ஆக்கி விடுகின்றது. பிறகு, நல்லியல்புடைய மனிதன் ஆரம்ப வயதின் பெரு வெள்ளத்தில் இருந்து வெளியே வந்த பிறகு அவன் தன் இறைவன் பக்கம் கவனம் செலுத்துகின்றான்.

இந்த அசுத்தம் உலகில் எவ்வாறு பரவியுள்ளது என்பதை நல்லியல்பு கொண்ட மனிதர் பார்க்கும் பொழுது பிறகு அவர் இறைவன் புறம் கவனம் செலுத்துகிறார். கவனம் ஏற்படுதலின் விளைவால் என்ன நடக்கிறது என்றால், உண்மையான தவ்பா செய்து செய்யத்தகாத விஷயங்களிலிருந்து விலகிக் கொள்கிறார். பிறகு, அவர் தவ்பா செய்கிறார். தனது இயல்பு எனும் ஆடையைத் தூய்மையாக்கும் கவலையில் ஈடுபட்டு விடுகிறார். இவை பொதுவாக மனித வாழ்வின் வரலாறாகும். அதை மனித குலம் கடக்க வேண்டி வருகிறது. எனவே, இதிலிருந்து வெளிப்படுவது என்னவென்றால் தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதே உண்மை ஆயின், எவருக்கும் ஈடேற்றம் அளிப்பதே இறைவனின் நோக்கமல்ல என்பது தெளிவாக நிரூபணமாகிறது.(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23,பக்கம் 193)

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: அப்போது சில மக்கள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

வந்திருந்தார்கள். அவர்கள் பைஅத் செய்யும் சபையை அமைத்திருந்தார்கள். அவர்களுக்கு அன்னார் அறிவுரை வழங்கினார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இறைவனின் நாட்டம் என்னவென்றால், மனிதன் தூய்மையான தவ்பா செய்ய வேண்டும். தன்னிடம் பாவம் நிகழாதிருக்க துஆ செய்ய வேண்டும். மறுமையிலும் இழிவடையக் கூடாது. இம்மையிலும் இழிவடையக் கூடாது. எவ்வாறான தவ்பா இருக்க வேண்டும் என்றால், உலகிலும் இழிவடையக் கூடாது. மரணித்த பிறகும் இழிவடையக் கூடாது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: மனிதன் புரிந்து பேசாத வரை அவனிடம் பணிவு உருவாகாத வரை இறைவன் வரை அந்த விஷயம் சென்றடைவதில்லை. 40 நாட்கள் கடந்தும் இறைவழியில் அழுகை வரவில்லை என்றால் உள்ளம் கடினமாகி விடுகிறது என்று சூஃபிமார்கள் எழுதியுள்ளார்கள். எனவே மனிதன் அழுவதே கடினமான உள்ளத்திற்கான பரிகாரமாகும். இதற்கான தூண்டுதல் காரணிகள் உள்ளன. மனிதன் தான் எதை செய்து வைதுள்ளான்? தனது ஆயுளின் நிலை என்ன? என்று பார்க்க வேண்டும். ஏனைய கடந்த கால நிலைமைகளைப் பார்க்க வேண்டும். கடந்து போன நிலைமைகளில் ஏராளமான வேதனை தரும் நிலைமைகளும் இருக்கின்றன. அவற்றின் மீது பார்வையை செலுத்த வேண்டும். பின்னர் மனித உள்ளம் நடுநடுங்கி விடுகின்றது.

நான் பாவங்களிலிருந்து தவிர்ந்து இருக்கின்றேன் என்று வாதிட்டு சொல்பவன் பொய்யன் ஆவான். எங்கு இனிப்பு உள்ளதோ அங்கு நிச்சயம் எறும்பு வரும். அதேபோன்று ஆன்மாவின் எதிர்பார்ப்புகளும் உடன் இருக்கவே செய்கின்றன. அவற்றிலிருந்து என்ன ஈடேற்றம் அடைய முடியும்? இறைவனுடைய அருள் மற்றும் கருணையின் கை இல்லை என்றால் மனிதனால் பாவத்திலிருந்து தப்பிக்க இயலாது. எந்தவொரு நபியாலும், இறைநேசராலும் முடியாது. தங்கள் மூலம் பாவம் நிகழ்வதில்லை என்பது அவர்களுக்கு பெருமிதத்திற்கான இடம் இல்லை. மாறாக, அவர்கள் எப்பொழுதும் இறைவனின் அருளை வேண்டி வந்தார்கள்.

நபிமார்கள் இஸ்திஃக்ஃபார் செய்வதன் பொருளே இறைவனின் அருளின் கை அவர்கள் மீது இருக்க வேண்டும் என்பதாக இருக்கிறது. இல்லையெனில், மனிதனை அவனது ஆன்மாவுடன் விடப்பட்டால் அவன் ஒருபோதும் குற்றமற்றவனாகவும் பாதுகாப்பானவனாகவும் இருக்க முடியாது.

اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِىْ وَ بَيْنَ خَطَايَاىَ۔

என்ற துஆவும் பிற துஆக்களும் இஸ்திஃக்ஃபார் உடைய இதே பொருளை உரைக்கின்றன. மனிதன் இறைவனின் அடைக்கலத்தின் கீழ் தன்னைத் தானே கொண்டு வருவதே அடியாராக இருப்பதில் உள்ள இரகசியமாகும். எவர் இறைவனின் அடைக்கலத்தை விரும்புவதில்லையோ அவர் ஆணவம் கொண்டவர் ஆவார்; இறுமாப்பு உடையவர் ஆவார்.(மல்ஃபூஸாத் தொகுதி 6, பக்கம் 21,1984-ம் ஆண்டு பதிப்பு)

ஒருவர் அன்னாரிடத்தில் இறைவணக்கத்தில் ஆர்வமும், ஈடுபாடும் எவ்வாறு உருவாகிறது? என்று கேட்டார். இப்பொழுதும் மக்கள் பலர் (இந்தக் கேள்வி(யைக்) கேட்கின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நற்செயல்கள் மற்றும் இறைவணக்கத்தில் ஆர்வமும், ஈடுபாடும் தன் புறமிருந்து உருவாக முடியாது. இது இறைவனின் அருள் மற்றும் (அவன் தரும்) நல்வாய்ப்பினால் கிடைக்கின்றது. அதற்கு மனிதன் பதற்றம் அடையாமல் இருப்பதும், இறைவனிடம் அவனது நல்வாய்ப்பு மற்றும் அருளுக்காக துஆக்கள் செய்து கொண்டே இருப்பதும் அவசியம் ஆகும். இறைவணக்கத்திற்கான ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் அல்லாஹ்விடமே கேட்க வேண்டும். மேலும், அந்த துஆக்களில் களைப்படைந்து விடக் கூடாது.

மனிதன் இவ்வாறு நிரந்தரத்தன்மையை மேற்கொண்டு ஈடுபட்டிருக்கும்போது இறுதியில் இறைவன் தனது அருளால், எதற்காக மனிதனின் உள்ளத்தில் துடிப்பும், நிம்மதியின்மையும் இருக்குமோ அதை அளித்து விடுகின்றான். இறை வணக்கத்தில் ஆர்வம் மற்றும் ஈடுபாட்டிற்கான துடிப்பும் நிம்மதியின்மையும் இருக்கிறது என்றால் பின்னர் நிரந்தரத்தன்மையுடன் ஈடுபட்டிருங்கள். இறுதியில் அந்த நிலை உருவாகி விடுகிறது. அதாவது, இறை வணக்கத்திற்காக ஓர் ஆர்வம், ஈடுபாடு மற்றும் இனிமை உருவாக ஆரம்பித்து விடுகிறது. ஆனால், ஒருவர் போராட்டம் மற்றும் கடும் முயற்சியை மேற்கொள்ளவில்லை என்றால் முயற்சியே செய்யாமல், போராடாமல் (ஓதி) ஊதி ஒருவர் சரி செய்து விடுவார் என்று கருதினால் இது அல்லாஹ்வின் சட்டமும், நடைமுறையும் கிடையாது.

எனவே எவர் இந்த வழிமுறையில் அல்லாஹ்வை சோதிக்கிறாரோ அவர் அல்லாஹ்வை பரிகாசம் செய்கின்றார்; மேலும் வீழ்த்தப்படுகிறார். உள்ளம் அல்லாஹ்வின் கையிலேயே இருக்கிறது என்பதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். அவனது அருள் இல்லையென்றால், அடுத்த நாளே ஒருவர் கிறிஸ்தவர் ஆகிவிடலாம்; அல்லது வேறு ஏதாவது மார்க்கமின்மையில் மூழ்கி விடலாம். எனவே எல்லா நேரமும் அவனது அருளுக்காக துஆ செய்து கொண்டே இருங்கள். மேலும், அவன் உங்களை நேரான பாதையில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று அவனது இஸ்திஆனத் (உதவித் தேடலை) விரும்புங்கள்.

எவர் அல்லாஹ்வை விட்டும் தேவையற்றவராக ஆகி விடுகிறாரோ அவர் ஷைத்தான் ஆகிவிடுகிறார். எனவே, மனிதன் இஸ்திஃக்ஃபார் செய்து கொண்டே இருப்பது அவசியம் ஆகும். அப்போதுதான் மனிதனை அழித்து விடக் கூடிய அந்த விஷம் மற்றும் உத்வேகம் உருவாகாது.(மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 154-155)

எனவே இறை வணக்கத்திற்கான தரத்தைப் பெறுவதற்கும் இஸ்திஃக்ஃபார் செய்வது அவசியம் ஆகும்.

பின்னர், அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான உத்தி என்ன? என்பதை விளக்கியவாறு அன்னார் (அலை) கூறினார்கள்: தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும். இது உத்தியாகும். தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் இன்றி மனிதன் என்னதான் செய்ய முடியும்? தவ்பா இஸ்திஃக்ஃபார் செய்தீர்கள் என்றால், இறைவன் மன்னித்து விடுவான் என்றே எல்லா நபிமார்களும் கூறியுள்ளார்கள்.

எனவே தொழுகைகளை நிறைவேற்றுங்கள். இனி பாவங்களில் இருந்து தப்பிப்பதற்காக இறைவனிடம் உதவி தேடுங்கள். முந்தைய பாவங்களுக்கு மன்னிப்புக் கோருங்கள். மீண்டும், மீண்டும் இஸ்திஃக்ஃபார் செய்யுங்கள். அப்போதுதான் மனித இயல்பில் உள்ள பாவம் செய்வதற்கான ஆற்றல் வெளிப்படாது. மனிதனின் இயல்பில் இரு வகையான திறன்கள் காணப்படுகின்றன. ஒன்று, நன்மைகளை சம்பாதிப்பதற்கும் நற்செயல்களை செய்வதற்குமான ஆற்றல் ஆகும். இரண்டாவது, தீய செயல்களை செய்வதற்கான ஆற்றல் ஆகும். இத்தகைய ஆற்றலைத் தடுத்து வைப்பது இறைவனின் பணியாகும். கல்லுக்குள் ஒரு நெருப்பின் ஆற்றல் இருப்பது போன்று இந்த ஆற்றல் மனிதனுக்குள் இருக்கிறது.

பிறகு கூறினார்கள்:

وَاَنِ اسْتَغْفِرُوْا رَبَّكُمْ ثُمَّ تُوْبُوْٓا اِلَيْهِ

என்பதை நினைவிற் கொள்ளுங்கள்! இந்த இரண்டு விஷயங்கள் இந்த சமுதாயத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. ஒன்று ஆற்றலைப் பெறுவதற்காக இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும். மற்றொன்று பெறப்பட்ட ஆற்றலை செயல் ரீதியாக காட்டுவதற்காக தவ்பா செய்தவாறு அவன் பக்கம் திரும்ப வேண்டும். ஆற்றலைப் பெறுவது இஸ்திஃக்ஃபார் ஆகும் அதை பிற சொற்களில் இஸ்திம்தாத் மற்றும் இஸ்திஆனத் என்றும் கூறுவார்கள். முன்னரும் கூறப்பட்டது போன்று சூஃபிமார்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

உடற்பயிற்சி செய்வதனால் பளு தூக்குவதனால் சுழற்றுவதனால் உடல் ஆற்றல் மற்றும் வலிமை அதிகரிக்கிறது. அவ்வாறே ஆன்மிக டம்பல் இஸ்திஃக்ஃபார் ஆகும். அதனுடன் ஆன்மாவுக்கு ஓர் ஆற்றல் கிடைக்கிறது. உள்ளத்தில் உறுதித் தன்மை உருவாகிறது. எவருக்கு ஆற்றல் பெறுவது நோக்கமோ அவர் இஸ்திஃக்ஃபார் செய்யட்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 2,பக்கம் 67-68)

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இறைவனின் அருள் மற்றும் கருணையின் கதவு ஒருபோதும் மூடப்படுவதில்லை. மனிதன் உண்மையான உள்ளத்தோடு களங்கமற்றத் தன்மையோடு திரும்பினால் அவன் மிக்க மன்னிப்பவனாகவும், மேன்மேலும் கருணை காட்டுபவனாகவும் இருக்கின்றான். மேலும், தவ்பாவை ஏற்றுக் கொள்பவனாவான்.

எந்தெந்தப் பாவிகளையெல்லாம் மன்னிப்பான் என்று கருதுவது இறைவனின் சமூகத்தில் கடும் அவமரியாதை மற்றும் பண்பற்றத் தன்மையாகும். அவனுடைய கருணையின் கருவூலங்கள் விசாலமானவையும், எல்லையற்றவையும் ஆகும். அவனிடம் எந்தப் பற்றாக்குறையும்

இல்லை. அவனுடைய கதவுகள் எவருக்கும் அடைக்கப்படுவதில்லை. இவ்வளவு படித்தவர்களுக்கு எங்கிருந்து வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற ஆங்கிலேயர்களின் ஊழியங்களைப் போன்றது அல்ல.

இறைவனுக்கு முன் எத்தனை பேர் சென்றடைவார்களோ அத்தனை பேரும் உயர்த் தரத்தைப் பெறுவார்கள். இது உறுதியான வாக்குறுதி ஆகும். எந்த மனிதன் இறைவனிடம் அவநம்பிக்கை அடைந்து, அவன் கவனமற்றவனாக இருக்கும்போது அவனுக்கு அவனது இறுதிமூச்சு தருணம் வருகிறதோ அவன் பெரும் துர்பாக்கியசாலியாவான்; பேறிழந்தவன் ஆவான். ஐயமின்றி அச்சமயம் கதவு அடைக்கப்பட்டு விடுகிறது. இறுதியில் மரணிக்கும் நேரம் வரும்போது பிறகு ஒன்றும் இல்லை.

பிறகு கூறினார்கள்: அரபு மொழியில் தவ்பா என்பது திரும்புவதற்குக் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே திருக்குர்ஆனில் இறைவனின் பெயரும் தவ்வாப் அதாவது அதிகம் திரும்புபவன் என்பதாகும். இதன் பொருளாவது மனிதன் பாவங்களில் இருந்து விடுபட்டு உண்மையான உள்ளத்துடன் இறைவன் பக்கம் திரும்பும்போது இறைவன் அவனை விட அதிகம் அவன் பக்கம் திரும்புகிறான். இந்த விஷயம் முற்றிலும் இயற்கை நியதிக்கு ஏற்ப உள்ளதாகும்.

ஒரு மனிதன் உண்மையான உள்ளத்தோடு இன்னொரு மனிதன் பக்கம் திரும்பும் போது அவனது உள்ளமும் அவனுக்காக மென்மையாகி விடும் என்பதை இறைவன் மனித குலத்தின் இயல்பில் வைத்துள்ளான். இவ்வாறிருக்க, மனிதனோ உண்மையான உள்ளத்தோடு இறைவன் பக்கம் திரும்புவான். ஆனால், இறைவன் அவன் பக்கம் திரும்ப மாட்டான் என்ற விஷயத்தை அறிவு எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? இன்னும் சொல்வதாயின் மிகவும் பரிவுள்ளவனாகவும் கருணையாளனாகவும் இருக்கும் இறைவன் அடியாரை விட மிக அதிகம் அவன் பக்கம் திரும்புகிறான். எனவே, திருக்குர்ஆனில் இறைவனின் பெயர் நான் தற்போது எழுதியது போன்று தவ்வாப் என்று உள்ளது. அதாவது, அதிகம் திரும்புபவன். ஆக, அடியானின் திரும்புதல் வெட்கம், நாணம், தாழ்வு மற்றும் பணிவு ஆகியவற்றுடன் இருக்கிறது. இறைவனின் திரும்புதல் கருணை மற்றும் பாவங்களை மன்னித்தலுடன் இருக்கிறது.

கருணை என்பது இறைவனின் பண்புகளில் ஒன்றாக இருக்கவில்லை என்றால், எவரும் ஈடேற்றம் அடைய முடியாது. அந்த மக்கள் இறைவனின் பண்புகள் மீது ஆழ்ந்து கவனம் செலுத்தவில்லை என்பதும், தம் செயல் மற்றும் அமல்களையே முழுவதுமாக சார்ந்துள்ளார்கள் என்பதும் வருத்தத்திற்குரிய விஷயம் ஆகும். ஆனால், எவருடைய அமல்களும் இல்லாமல் ஆயிரக்கணக்கான அருட்களை மனிதனுக்காக பூமியில் படைத்த அந்த இறைவனுக்கு இத்தகைய பண்பு இருக்க முடியுமா? அதாவது, பலவீனமான மனிதன் தனது கவனமின்மையிலிருந்து விழிப்புணர்வு கொண்டு அவன் பக்கம் திரும்புகையில் அதுவும் மரணிக்கும் அளவுக்குத் திரும்பினால் முதலில் தூய்மையற்ற ஆடையைத் தனது உடலில் இருந்து அவிழ்த்து விட்டால் அவனது அன்பு எனும் நெருப்பில் எரிந்து விட்டால் அதன் பிறகும் இறைவன் அவன் பக்கம் கருணையுடன் திரும்ப மாட்டான் என்றால் இதற்குப் பெயர் இறைவனின் இயற்கை நியதியா? இல்லை. இவ்வாறு கூறுபவர் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! (ஷஃமாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயின், தொகுதி 23, பக்கம் 133-134)

தம்முடைய வாழ்வில் பகிரங்கமாகத் தெரிகின்ற மாற்றங்களை உருவாக்குவதன் பால் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நன்றாக நினைவிற் கொள்ளுங்கள்! அல்லாஹ்வை விட்டு விட்டு மருந்து மற்றும் திட்டங்களை நம்பியிருப்பது முட்டாள்த்தனமாகும். உங்கள் வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் புதிய வாழ்வு இஸ்திஃக்ஃபார் உடைய வாழ்வு என்பது தெரிய வர வேண்டும். இஸ்திஃக்ஃபார் அதிகமாக செய்யுங்கள்.

உலகில் அதிகமாக மூழ்கியதன் காரணமாக எவர்களுக்கு குறைவான நேரம் கிடைக்கிறதோ அவர்கள் (மற்ற) எல்லாரையும் விட அதிகம் அஞ்ச வேண்டும். உலகப் பணிகளில் மூழ்கியதன் காரணமாக மிகக் குறைவான நேரம் கிடைக்கிறது என்று கூறுகிறார்கள். அவர்கள் மிகவும் அஞ்ச வேண்டும். வேலை செய்யும் மக்களுக்குப் பெரும்பாலான இறை கட்டளைகள் விடுபட்டுப் போகின்றன.

எனவே நிர்பந்தமான சூழ்நிலையில் லுஹர், அஸர் மற்றும் மஃக்ரிப், இஷா தொழுகைகளை சேர்த்து தொழுது கொள்வது ஆகுமானது. மிகவும் நிர்பந்தமான சூழல் என்றால், சேர்த்து தொழுது கொள்ளுங்கள். ஆனால், தொழுகைகளை அவற்றிற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவதுதான் அசல் விஷயம் ஆகும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அதிகாரிகளிடம் தொழுவதற்கான அனுமதி கோரப்பட்டால் அவர்கள் அனுமதி அளித்து விடுகிறார்கள் என்பதை நான் அறிவேன்.

வேலை செய்பவர்கள் குறித்து கூறுகிறார்கள்: அதிகாரிகளிடம் கூறினீர்கள் என்றால் அவர்கள் முஸ்லிம்கள் இல்லையென்றாலும் அவர்களிடம் அனுமதி வேண்டப்பட்டால் தொழுவதற்கு அனுமதி கிடைத்து விடுகிறது. தொழுகையை விடுவதற்காக இப்படித் தேவையில்லாத காரணங்கள் மனதின் பலவீனத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. அல்லாஹ்வுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான உரிமையை ஆகியவற்றில் அநீதியிழைக்காதீர்கள்; வரம்பு மீறாதீர்கள். உங்களுடைய கடமையை மிகவும் நேர்மையுடன் நிறைவேற்றுங்கள்.

எனவே அடிப்படை கட்டளைகளையும் முன்னிறுத்தி அவற்றை சரியாகப் பின்பற்றும் போதுதான் இஸ்திஃக்ஃபார் மற்றும் தவ்பா செய்வதற்குப் பயன் இருக்கும். தொழுகைகளை நிறைவேற்றுவதில் முறையாக இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்கான உரிமை மற்றும் அடியார்களுக்கான உரிமை ஆகியவற்றையும் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

பிறகு, அன்னார் (அலை) கூறினார்கள்: எனவே எழுந்திருங்கள்! தவ்பா செய்யுங்கள். உங்கள் எஜமானனை நற்செயல்களால் திருப்திப்படுத்துங்கள். நினைவிற் கொள்ளுங்கள்! கொள்கை ரீதியான தவறுகளுக்கான தண்டனையோ மரணித்த பிறகுதான் கிடைக்கும். இந்து, கிறிஸ்தவர் அல்லது முஸ்லிம் ஆக இருந்ததற்கான தீர்ப்போ கியாமத் நாளன்று வழங்கப்படும். ஆனால், எவர் அநீதி, அக்கிரமம், தீமை மற்றும் ஒழுக்கமின்மையில் எல்லை மீறுகிறாரோ அவருக்கு இந்த இடத்திலேயே தண்டனை வழங்கப்படுகிறது. அப்போது அவரால் இறைவனின் தண்டனையிலிருந்து எவ்வகையிலும் ஓட முடியாது. எனவே, உங்கள் இறைவனை விரைவில் திருப்தியடையச் செய்து கொள்ளுங்கள். அவன் மிகவும் பரிவுள்ளவன் ஆவான். ஒரு நொடிப் பொழுதின் உருக்கிவிடும் தவ்பாவால் எழுபது ஆண்டின் பாவத்தை அவனால் மன்னிக்க முடியும். தவ்பா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று கூறாதீர்கள்.

நினைவிற் கொள்ளுங்கள்! நீங்கள் உங்களுடைய அமல்களால் ஒருபோதும் தப்பிக்க முடியாது. எப்பொழுதும் அருள் காப்பாற்றுகிறது; அமல்கள் அல்ல. எனவே அல்லாஹ்வுக்கு முன் குனியுங்கள். அவனது அருளை வேண்டிக் கொண்டே இருங்கள். இஸ்திஃக்ஃபார் செய்து கொண்டே இருங்கள்.

பிறகு, கூறினார்கள்: பரிவுள்ளவனும், கருணையாளனுமான இறைவா! எங்கள் அனைவர் மீதும் அருள் புரிவாயாக! நாங்கள் உன் அடியார்கள் உன் வாயிற்படியில் விழுந்து கிடக்கிறோம். ஆமீன்.

அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக! நாம் தவ்பாவின் உண்மையான பொருளைப் புரிந்தவாறு இஸ்திஃக்ஃபார் உடைய உண்மைத்துவத்தைப் புரிந்தவாறு இஸ்திஃக்ஃபார் மற்றும் தவ்பா செய்யக்கூடியவர்களாக இருப்போமாக!

இனி நான் சில மர்ஹூம்களைப் பற்றி எடுத்துரைப்பேன். பின்னர் அவர்களுடைய ஜனாஸா தொழுகையை யையும் தொழ வைப்பேன். அவர்களில் முதலாவது குறிப்பு மதிப்பிற்குரிய ஆன்ஸா பேகம் ஸாஹிபா அவர்களுடையது ஆகும். இவர்கள் ஹஸ்ரத் மீர் முஹம்மத் இஸ்ஹாக் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகள் ஆவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் 93வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். காதியானில் பிறந்தார்கள். ஹஸ்ரத் மீர் நாஸிர் ஸாஹிப் இவர்களின் தந்தை வழிப் பாட்டனார் ஆவார்கள். இவர்களின் தாயாரின் பெயர் ஹஸ்ரத் ஸாலிஹா பேகம் ஸாஹிபா ஆகும். அவர்கள் பீர் மன்ஸூர் முஹம்மது ஸாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள். இவர்கள்

ஆரம்பக் கல்வியைக் காதியானிலிருந்து பயின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் மற்றும் ஒரு பெண் பிள்ளையை அருளினான். மர்ஹூம் காஸி ஷவ்கத் ஸாஹிபுடன் இவர்களுக்குத் திருமணமானது.

ரப்வாவில் இருந்து மீர் மஹ்மூத் அஹ்மத் நாஸிர் ஸாஹிப் அவர்கள் தம் சகோதரியைப் பற்றி எழுதுகிறார்கள்: மிகவும் எளிமையானவர்; முற்றிலும் அப்பாவியாகவும், எவருக்கும் தீங்கு நினைக்காதவராகவும் இருந்தார். எங்கள் சகோதரி திருமணத்துக்கு முன்பு முழு குடும்பத்திற்கும் தொண்டு செய்பவராக இருந்தார்.

சகோதரர் கூறுகிறார்கள்: ரப்வாவின் ஆரம்ப காலத்தில் இங்கு மின்சாரம் இருந்திராதபோது, வெப்பம் அதிகமாக இருக்கும். மண் வீடுகளில் வசித்து வந்தோம். சகோதரர் கூறுகிறார்கள்: வெப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாங்கள் அனைவரும் ஓர் அறையில் ஒன்று கூடி விடுவோம். அங்கு ஒரு மிகப் பெரிய கை விசிறி கூரையில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதனை கயிற்றைப் பிடித்து அசைப்பார். யாரும் சொல்லாமலேயே நாங்கள் நிம்மதியாக உறங்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய நிம்மதிக்காக இவர் வெளியே அமர்ந்து அந்தக் கயிற்றை அசைத்துக் கொண்டிருப்பார். அனைவருக்கும் தொண்டு செய்வதற்கான தன்னலமற்ற உணர்வு இவரிடம் இருந்தது.

இவர்களுடைய பிள்ளைகள் எழுதுகிறார்கள்: எங்கள் தாயார் மிகவும் களங்கமற்ற அஹ்மதி முஸ்லிமாக இருந்தார்கள். உரிமைகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் துணைவியாராக இருந்தார்கள். மிகவும் எளிய , அன்பு செலுத்தும் இயல்புடையவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்), அன்னாருடைய கலீஃபாக்கள் மற்றும் ஸஹாபிகளின் மிக முக்கியமான மற்றும் கருத்து நிறைந்த சம்பவங்களை மிகவும் எளிய வடிவில் கூறி வந்தார்கள்.

ஜமாஅத்தின் வரலாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி), அன்னாருடைய கலீஃபாக்கள் மற்றும் ஸஹாபிகளின் சம்பவங்களையும் மிகவும் எளிமையாக எடுத்துக் கூறி வந்தார்கள். பிள்ளைகளுக்கும், மக்களுக்கும், ஈமானில் நிலைத்து நில்லுங்கள்; கண்ணியமான வாழ்க்கையை வாழுங்கள் என்ற விஷயத்தைப் பொதுவாக அறிவுறுத்தி வந்தார்கள். ஜமாஅத்தின் பணிகளில் மிகவும் சுறுசுறுப்பாக அங்கம் வகித்து வந்தார்கள். இவர்களின் மிகப் பெரிய சிறப்பு மனித குலத்தின் மீதான பரிவாகும். தப்லீஃகிற்கும் மிகுந்த ஆர்வம் இருந்தது. எந்த அளவுக்கு என்றால், இவர்கள் Airport உடைய Terminal இல் Airline இன் விமானி உட்பட அனைவருக்கும் இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்து வந்தார்கள். இவர்களின் பண்புகளில் அழகும், எளிமையும் இருந்தது. மிகவும் உன்னதமாக சொற்பொழிவாற்றுவார்கள்.

இவர்களின் சகோதரி மகள் அமத்துல் காஃபீ ஸாஹிபா கூறுகின்றார்கள்: இவர்கள் பெற்ற அடிப்படையான தர்பிய்யத் எவ்வளவு உறுதி வாய்ந்ததாக இருந்தது என்றால், தம் பெற்றோர்களின் தர்பிய்யத்தில் இருந்து ஒருபோதும் விலகியதில்லை. மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்கான உணர்வு எந்த அளவு இருந்தது என்றால் நியூயார்க் போன்ற நகரத்தில் முறையாகப் பள்ளிக்குச் சென்று பள்ளியைத் தூய்மைப்படுத்தி வந்தார்கள்.

மக்கள் கூறுகிறார்கள்: இவர்களுக்கு உடல் நலம் நன்றாக இருந்த காலம் வரை வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கும்போது, பொது மக்களுக்கு அவர்களின் புரிதல் மற்றும் மொழிக்கு எற்ப தப்லீஃக் செய்து வந்தார்கள். ஏழைகள் மற்றும் நிர்பந்தத்திற்காளானவர்களுக்காக மனதில் அனுதாபம் மற்றும் அன்பின் ஒரு சூறாவளி வீசிக் கொண்டே இருந்தது. அல்லாஹ் இவர்களின் சந்ததிகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. இவர்களை மன்னித்து கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் தரத்தை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா ஸியால்கோட்டைச் சேர்ந்த மதிப்பிற்குரிய புஷ்ரா அக்ரம் ஸாஹிபா அவர்களுடையது. இவர்களும் கடந்த நாள்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

1955-ம் ஆண்டு ஸியால்கோட் மாவட்டத்தின் பட்டால் எனும் இடத்தில் பிறந்தார்கள். மர்ஹூமா நற்பண்பும், இறையச்சமும் கொண்டவராகவும் தொழுகை மற்றும் நோன்பைக் கடைபிடிக்கும் ஒரு களங்கமற்ற பெண்மணியாக இருந்தார்கள். விருந்தோம்பல், ஏழைகளைப் பராமரித்தல் மற்றும் கிலாஃபத் மீதான நேசம் இவர்களிடம் வெளிப்படையாகத் தெரியும் சிறப்புகளாக இருந்தன. வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் கண்ணியமளித்து வந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் கணவர் மட்டுமின்றி மூன்று மகள்களும் ஒரு மகனும் உள்ளார்கள்.

இவர்களின் மகன் ஷெஹர்யார் பாபர் ஷஹ்ஸாத் ஸாஹிப் இயக்கத்தின் முரப்பி ஆவார். ஸிராலியோனில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெறுகிறார்கள். அங்கு செயல் களத்தில் இருக்கும் காரணத்தினால் இவர்களின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

இந்த முரப்பி பாபர் ஷஹ்ஸாத் ஸாஹிப் எழுதுகிறார்கள்: ஜாமிஆவில் நான் சேர்ந்தபோது இவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். உன்னிடம் என்ன கேள்வி கேட்டார்கள்? என்று இவர்கள் என்னிடம் கேட்டார்கள். மகன் கூறுகிறார்: நீங்கள் ஒரே மகன் ஆவீர்கள் :நீங்கள் வாழ்வை அர்ப்பணித்து விட்டால் பெற்றோரை யார் கவனித்துக் கொள்வார்கள்? என்று ஜாமிஆவில் கேட்கப்பட்டது.

மகன் கூறுகிறார்: நான் என்ன பதில் அளிக்க வேண்டுமோ அளித்து விட்டேன். ஆனால், இதைக் கேள்விப்பட்ட தாயார் கூறினார்கள்: எனக்கு ஏழு மகன்கள் இருந்திருந்தாலும் நான் அவர்கள் அனைவரையும் வக்ஃப் செய்திருப்பேன். மகன் கூறுகிறார்: கடைசி நேரத்தில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எப்படி இருக்கின்றீர்கள்? என்று ஃபோன் செய்து விசாரித்தேன். அன்னார் மிகுந்த வேதனையில் இருந்தபோதிலும் கூட நான் நலமாக இருக்கிறேன்; டாக்டரின் வழிகாட்டலுக்கிணங்க எல்லாம் உண்கிறேன்; பருகுகிறேன் என்று கூறினார்கள். ஆனால், அத்துடன் இதையும் கூறினார்கள்: எனக்கு ஏதாவது ஆகிவிட்டால் கவலை கொள்ளக் கூடாது. நீர் இருக்கும் அந்த ஆஃப்ரிக்காவிலேயே இருக்க வேண்டும். பிள்ளைகளைக் கவலையில் ஆழ்த்தாதீர். நீர் வக்ஃபே ஸிந்தகீ (வாழ்வை அர்ப்பணித்தவர்) ஆவீர். எனவே பொறுமை காக்க வேண்டும்.

மகன் கூறுகிறார்கள்: இவையே என் தாயாரின் கடைசி சொற்களாக இருந்தன. ஏழைகள் தேவையுடையவர்கள் மற்றும் விதவைகள் மீது அக்கறை காட்டுவார்கள். அவர்களுக்குப் பொருளாதார உதவி செய்து வந்தார்கள். எப்பொழுதெல்லாம் கோதுமை மற்றும் அரிசியின் விளைச்சல் வருமோ அப்பொழுதெல்லாம் அதனைப் பல பங்குகளாகப் பிரிப்பார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவ மன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களின் சந்ததிகளுக்கும் பொறுமையை வழங்குவானாக.

மூன்றாவது குறிப்பு, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சவ்த்ரி முஹம்மது அக்தர் ஸாஹிப் அவர்களின் துணைவியார் நுஸ்ரத் ஜஹான் ஸாஹிபா அவர்களுடையது ஆகும். இவர்களும் கடந்த நாட்களில் 87 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களின் தந்தை வழிப்பாட்டனார் ஹஸ்ரத் பாபூ முஹம்மது அஃப்ஸல் அவ்ஜல்வி ஸாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஆவார்கள். அவர்களின் நிழலில் இவர்கள் தர்பிய்யத் பெற்றார்கள். இவர்களுக்கு மூளை ரத்தக் கசிவு நோய் ஏற்பட்டு விட்டது. கடந்த 16 வருடமாக இதன் காரணமாகவே படுக்கையில் இருந்தார்கள். இவர்களின் ஒரு மகன் ஸாஹித் மற்றும் மருமகள் இரண்டு பேரும் குறிப்பாக இவர்களுக்குத் தொண்டாற்றினார்கள்.

மருமகள் கூறுகிறார்கள்: இவர்கள் சுறுசுறுப்பாக வாழ்ந்த காலத்தில் எப்பொழுதும் என்னோடு எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றால் மாமியாராக அல்லாமல் மகளைப் போன்று நடத்தினார்கள். தொழுகை, நோன்பு மற்றும் தஹஜ்ஜுதைக் கடைபிடித்து வந்தார்கள். இறை வணக்கத்தை குறிப்பாக பேணி வந்தார்கள். தமது வீட்டிலும் இறை வணக்கத்திற்காக தனி இடத்தை உருவாக்கி வைத்திருந்தார்கள்.

மஸ்ஜித் முபாரக்கில் தர்ஸ் கொடுக்கப்படும்போது தாருல் உலூமில் இருந்து தர்ஸ் கேட்பதற்காக நடந்து செல்வார்கள். இன்னும் சொல்வதாயின் கடைசி பத்து நாட்களில் தராவீஹ் தொழுகைக்காகவும் சென்று வந்தார்கள். கிலாஃபத் மீது அளவற்ற பற்று மற்றும்

கண்ணியம் வைத்திருந்தார்கள். இவர்களின் கணவர் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக பணியாற்றி வந்தார்கள். எங்கெல்லாம் அவர்களுக்குப் போஸ்டிங் இருந்து வந்ததோ அங்கெல்லாம் தமது வீட்டில் குழந்தைகளுக்குத் திருக்குர்ஆன் ஓதிக் கொடுக்கும் வகுப்பை நடத்தி வந்தார்கள். ரப்வாவில் வந்து தங்கியபோது அங்கும் திருக்குர்ஆன் ஓதிக் கொடுக்கும்; வகுப்புகளை நடத்தினார்கள். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் கணவர் மட்டுமின்றி மூன்று மகன்களும் மூன்று மகள்களும் உள்ளனர்.

இவர்களின் இளைய மகன் ஹாஃபிஸ் ராஷித் ஜாவேத் ஸாஹிப் அவர்கள் ரப்வாவில் தாருல் கஸா நாஸிமாக இருக்கின்றார்கள். வாழ்வை அர்ப்பணித்தவர் ஆவார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவ மன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும், இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பை இவர்களின் பிள்ளைகளுக்கும் வழங்குவானாக.

நான்காவது நற்குறிப்பு, அமெரிக்காவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நாஸிர் அஹ்மது குறைஷி ஸாஹிப் அவர்களுடையது ஆகும். இவர்களும் கடந்த நாட்களில் 84 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் அமத்துல் பாரீ நாஸிர் ஸாஹிபா அவர்களின் கணவர் ஆவார்கள். அவர்கள் நீண்ட காலமாக கராச்சி லஜ்னா இமாயில்லாஹ்வின் வெளியீட்டுத் துறை செயலராக இருந்து வந்தார்கள். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மட்டுமின்றி இரண்டு மகன்களும் மூன்று மகள்களும் உள்ளனர்.

இவர்களின் ஒரு மகள் வழிப் பேரர் வகாஸ் குர்ஷீத் முரப்பி ஆவார்கள். இவர்களின் மகன் வழிப் பேரர் ஒருவர் கனடாவின் ஜாமிஆவில் படித்துக் கொண்டிருக்கிறார். இவர்களின் தந்தையார் பெயர் மதிப்பிற்குரிய முஹம்மது ஷம்ஸூத்தீன் ஸாஹிப் பாகல்பூரி ஆகும். 1913-ம் ஆண்டில் இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் ஸய்யிதா ஸாரா பேகம் ஸாஹிபா அவர்களின் தந்தையார் மதிப்பிற்குரிய மவ்லவி அப்துல் மாஜித் ஸாஹிப் அவர்கள் அந்தப் பகுதியில் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைக்கான சான்றுகளை எடுத்து வைத்தார்கள்.

அப்போது இவர்களின் தந்தையார் பெரும் தாக்கத்திற்கு உள்ளானார்கள். மேடையில் சென்று சந்தித்தார்கள். ஜமாஅத் நூல்கள் வழங்கப்பட்டன. அதனைப் படித்த பிறகு அஹ்மதிய்யத்தின் மீதான உத்வேகம் ஏற்பட்டது. அவர்கள் துஆக்கள் செய்தார்கள். அல்லாஹ் அவர்களுக்குக் கனவின் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய தோற்றத்தையும் நற்செய்தி வழங்கும் கனவுகளையும் காட்டினான். எனவே, இவர்கள் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு பைஅத்திற்கான கடிதத்தை எழுதி விட்டார்கள். அன்னாரிடம் பைஅத் செய்தார்கள். இவ்வாறு பாகல்பூரின் ஆரம்ப அஹ்மதிகளில் ஒருவராக இருந்தார்கள்.

கடும் எதிர்ப்பின் காரணமாக தம் மனைவி, மக்களுடன் ஹிஜ்ரத் செய்து காதியானுக்கு வந்து விட்டார்கள். அங்கு களங்கமற்றத் தன்மை மற்றும் அன்பில் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். இவர்களுக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்(ரலி) அவர்களின் வாகன ஓட்டுனராகவும் பணியாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. நாஸிர் குறைஷி ஸாஹிப் காதியானில் பிறந்தார்கள். நாடு பிரிவினைக்குப் பிறகு கராச்சியில் தங்க ஆரம்பித்தார்கள். அங்கேயே கல்வி கற்றார்கள். சூழ்நிலை சரியில்லாத போதும் கடும் முயற்சியோடும் ஈடுபாடோடும் படித்து வந்தார்கள். பி.இ எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் படித்தார்கள்.

பிறகு, டெலிஃபோன் நிறுவனத்தில் பணிபுரிய ஆரம்பித்தார்கள். ஜெனரல் மேனேஜர் பதவி வரை முன்னேறினார்கள். அந்தப் பணியில் இருந்து ஓய்வு பெறும்போது மிகவும் கடுமையாக உழைக்கக் கூடிய மற்றும் நேர்மறையான அதிகாரி என்ற புகழுடன் பணி ஓய்வு பெற்றார்கள். ஜமாஅத் அஹ்மதிய்யா காராச்சியின் நாஸிம் ஆபாத் ஹல்காவின் ஹல்கா சத்ராக இருந்தார்கள். மற்ற எந்த இடங்களில் இருந்தார்களோ அங்கும் சத்ராக பணியாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அல்லாஹ் இவர்களுக்குப் பாவ மன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக!

இவர்களின் மனைவி அமத்துல் பாரீ ஸாஹிபா எழுதுகின்றார்கள்; நான் எப்பொழுதும் இவர்களைத் தொழுகை மற்றும் நோன்பை நிறைவேற்றுபவர்களாகக் கண்டிருக்கின்றேன். பள்ளிவாயிலேயே மனம் ஈடுபட்டிருக்கும். பொறுப்பான கணவராகவும் குழந்தைகளின் கல்வி மற்றும் தர்பிய்யத்தில் அதிகம் அக்கறை கொண்டவராகக் கண்டேன். இவர்களுக்குத் தேவையுடையவர்களுக்கு உதவி செய்வதற்கான நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்து வந்தது. கிலாஃபத்தோடு மிகவும் பற்றுள்ளவராக இருந்து வந்தார்கள். தெள்ளத் தெளிவான உண்மையான மற்றும் நேர்மையான விஷயங்களைக் கூறிவந்தார்கள். இறைவனின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அல்லாஹ் இவர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கு நல்வாய்ப்பை வழங்குவானாக.

தமிழாக்கம்

மவ்லவி

அதாவுல் முஃக்னீ

* *  * * * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

உலகின் எந்த ஒரு பொருளும் வீணாக படைக்கப்படவில்லை என்றக் கருத்து இந்த ஒரு சொல்லிலேயே தெளிவாக்கப்பட்டுள்ளது. ஒருவேளை بَعْضُهَا زِيْنَةً என்ற சொல் இடம் பெற்றிருந்தால் பின்னர் சில பொருட்கள் பயனுள்ளவை ஆகும்; சில பொருட்கள் பயனற்றவையாகும் என்று கருதியிருக்க முடியும். ஆனால், உலகிலுள்ள அனைத்து பொருட்களையும் இறைவன் உலகின் அழகிற்கு காரணியாக ஆக்கியிருக்கின்றான். எனவே இஸ்லாத்தின் பார்வையில் உலகின் ஒவ்வொரு பொருளிலும் நன்மைகள் உள்ளன ; மேலும் எந்தப் பொருளும் உலகிற்கு அழகு சேர்க்காமல் இல்லை என்பது தெரிய வருகின்றது. வேதனை என்னவென்றால், இந்தக் கட்டளையிலிருந்து முஸ்லிம்கள் பயனடைவதை விட்டு விட்டனர்; மேலும் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளைப் புறக்கணித்து விட்டனர். மேலும் ஐரோப்பியர்கள் திருக்குர்ஆனை ஒப்புக் கொள்ளாதபோதிலும் இதன்படி அமல் செய்தனர். மேலும், அறிவியலில் எந்த அளவிற்கு முன்னேற்றம் கண்டனர் என்றால் அவர்கள் முழு உலகிலும் மேலோங்கி விட்டனர்.

لِنَبْلُوَهُمْ اَيُّهُمْ اَحْسَنُ عَمَلًا

என்பதில் இதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, உலகிலுள்ள பொருட்கள் ஏன் படைக்கப்பட்டுள்ளன என்றால், மக்கள் அவை தொடர்பாக ஆராய்ச்சி செய்ய வேண்டும்; மேலும், உலகின் நிலையை சீர்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஆகும். இந்தப் பகுதி தொடர்பாக கிறிஸ்தவர்களிடம் தவறு ஏற்பட்டுள்ளது. அவர்கள் உலகின் இரகசியங்களை கண்டுபிடித்தனர். ஆனால், நல்ல அமல்களுக்கான முன்மாதிரிகளை வெளிப்படுத்தவில்லை. அதாவது, இந்த ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளின் விளைவால் அவர்கள் உலகில் அநீதி மற்றும் குழப்பத்திற்கான அடித்தளத்தை அமைத்தார்கள். மேலும் ஏறக்குறைய இதன் பக்கம் இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4,பக்கம் 390,காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

இழப்பிற்குரியவர்களாக ஆக்கிவிட வேண்டும்; மேலும் தீமையின் வாரிசுகளாக்கி விட வேண்டும் என்பது ஷைத்தானின் ஆசையாகும்.

**ஒரு நன்மையால் மற்றொரு நன்மை விளைகின்றது**

சிந்தித்துப் பாருங்கள்! ஒரு நன்மையால் மற்றொரு நன்மை விளைகின்றது. மேலும், இதே போன்று ஒரு தீமை மற்றொரு தீமைக்கு காரணியாக அமைந்து விடுகின்றது. உதாரணமாக, ஒரு பொருள் மற்றொரு பொருளை ஈர்க்கின்றது. இதேபோன்று இறைவன் இந்த ஈர்ப்பின் கோட்பாட்டை எல்லா விவகாரத்திலும் வைத்திருக்கின்றான். எனவே யாசிப்பவரிடம் மென்மையாக நடந்து, இவ்வாறு அவர் நல்லொழுக்க தருமத்தை செய்யும்போது பின்னர் அவரது இறுக்கம் அகன்று மற்ற நன்மையையும் அந்த நபர் செய்து விடுவார். மேலும் (யாசிப்பவராகிய) அவருக்கு அவர் சிறிது கொடுத்தும் விடுவார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1,பக்கம் 480-காதியான் பதிப்பு 2018)

* * * * * * *

## அமைதியின் ஒரு கலங்கரை விளக்கம்

**முஸ்லிம்கள் ஒன்றிணைந்து பரஸ்பர அன்பு மற்றும் ஒற்றுமையின் உணர்வுடன் ஏக இறைவனை அந்த இறைவன் கற்றுத் தந்த விதத்தில் வணங்க வழி செய்வதே ஒரு பள்ளிவாயிலின் தலையாய நோக்கமாகும். அதே நேரத்தில் மனித குலத்திற்கு சேவை செய்யும் ஒரு மையமாக அந்த பள்ளிவாயில் இருக்க வேண்டும் என்பது அந்த பள்ளிவாயிலின் இரண்டாவது அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்**

**தேவை அல்லது துன்பம் ஏற்படும்போது மற்ற நம்பிக்கைகள் கொண்ட மக்களுடன் தோளோடு தோள் நிற்க வேண்டும்**

**பரஸ்பர மரியாதை மற்றும் சகிப்புத் தன்மை ஆகியவை அடிப்படை நற்பண்புகள் ஆகும் என்று**

**இஸ்லாம் ஆரம்பத்தில் இருந்தே கற்றுத் தந்துள்ளது**

### ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபிலடெல்ஃபியா, அமெரிக்காவில் பைத்துல் ஆஃபியத் பள்ளிவாசல் திறப்பு விழாவையொட்டி அக்டோபர் 21, 2018 அன்று ஆற்றிய உரை

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தஷஹ்ஹுத்,தஅவூத் மற்றும் பிஸ்மில்லாஹ் ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்:

சிறப்பு மிக்க அனைத்து விருந்தினர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு! உங்கள் அனைவரின் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும், சமாதானமும் உண்டாகட்டுமாக!

முதலில், இந்த நகரத்தில் எங்களுடைய புதிய பள்ளிவாயிலை திறந்து வைக்கின்ற இந்த சிறப்பு மிக்க, மகிழ்ச்சியான தருணத்தில் எங்கள் அழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு எங்களுடன் கலந்து கொண்ட எங்கள் விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றி சொல்ல நான் விரும்புகிறேன். மனிதர்கள் எத்தகைய படைப்பினங்கள் என்றால் அவர்களால் சமூகத் தொடர்பு இல்லாமல் மற்றவர்களுடன் பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்ளாமல் வாழவே முடியாது என்பது ஒரு வாழ்வியல் உண்மையாகும். இனம், மதம் அல்லது சமூக பின்னணி சார்ந்த வேறுபாடுகள் எதுவாக இருந்தாலும் நாம் மனிதர்கள் என்ற நிலையில் ஒன்றிணைந்துள்ளோம். எனவே நம்மை தனிமைப்படுத்திக் கொள்ளாமல் அல்லது நம் சொந்த, குறிப்பிட்ட சமூக உறுப்பினர்களுடன் மட்டுமே தொடர்பு கொண்டிருக்காமல் மற்ற மக்களுடனும் நாம் பழக வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

எல்லா விதத்திலும் நமக்கிடையே உள்ள தடைகளை தகர்க்கவும், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் அறிதல் மேம்படவும் பேச்சுவார்த்தை மிகவும் முக்கியமானதாகும். மேலும் சமூக முன்னேற்றம், பரிணாமம், சமாதானம் மற்றும் ஒற்றுமையின் சூழலை வளர்த்தெடுத்தல் ஆகியவற்றிற்கு மக்களுக்கு இடையிலும் வெவ்வேறு சமூகங்களுக்கும் இடையிலும் கண்ணியத்திற்குரிய பேச்சுவார்த்தை மற்றும் உரையாடல் மிகவும் அவசியமானதாகும். ஆகையால், உங்களின் முக்கியமான அலுவல்களுக்கு இடையில் நேரம் ஒதுக்கி எங்களுடன் இணைந்துள்ள உங்கள் மீது நான் மிகவும் மதிப்பு கொள்கிறேன். உங்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள் இல்லை என்ற உண்மைக்கு அப்பாற்பட்டு நீங்கள் எங்கள் அழைப்பை ஏற்று, ஒரு பள்ளிவாயிலை திறப்பதற்கான ஒரு முழுக்க, முழுக்க மத சம்பந்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டுள்ளீர்கள். எனவே உங்களின் சகிப்புத் தன்மை மற்றும் மரியாதை ஆகியவற்றின் நிலைகளை பாராட்டாமல் என்னால் உரையை தொடர முடியாது.

நீங்கள் பங்கேற்பது, எங்கள் சமூகத்தின் உறுப்பினர்களுடன் உங்கள் தனிப்பட்ட உறவுகளை உறுதிப்படுத்துவதற்கான உங்கள் ஆசையின் ஓர் அடையாளம் என்றாலும் எங்கள் மார்க்கத்தினை மேலும் மகத்தான முறையில் புரிந்து கொள்ள வேண்டும் என்ற உங்கள் ஆர்வத்தையும் இது குறிக்கின்றது. காதால் கேட்பதையும் அல்லது மற்றவர் கூறுவதையும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ள விரும்பாத மக்களாக நீங்கள் இருப்பதையும் இது காட்டுகிறது. பல அறிவிப்புகளும் தவறாக இருக்கும். இன்றைய காலகட்டத்தில் இஸ்லாம் பற்றிய உண்மையைத் தேடுகின்ற உங்களின் பணி பாராட்டக் கூடிய ஒன்றேயாகும். ஊடகங்கள் முஸ்லிம்கள் பற்றி என்ன கூறுகின்றனவோ அல்லது இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள் எப்படி சித்தரிக்க முயற்சி செய்கிறார்களோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் இஸ்லாம் என்றால் என்ன? அது எதைக் குறிக்கிறது? என்பதை நீங்களே காண்பதற்காக வந்திருக்கின்றீர்கள். இதற்காக, நான் உங்களை பாராட்டுகின்றேன். மேலும் எனது மனப்பூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாரிடத்திலும் அன்பு; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் முழக்கம் அல்லது குறிக்கோளை நீங்கள் நன்கு அறிந்திருக்கலாம். இந்தக் குறிக்கோள் புதியதோ அல்லது திடீரென்று நாங்கள் உருவாக்கிய ஏதோ ஒன்றோ அல்ல. மாறாக, இந்த முழக்கம் இஸ்லாத்தின் புனித நூலான பரிசுத்த திருக்குர்ஆனின் போதனைகளையும், இஸ்லாத்தின் நிறுவனரான ஹஸ்ரத் முஹம்மது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் எங்களுக்கு கொடுக்கப்பட்ட போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

பரஸ்பர மரியாதை மற்றும் சகிப்புத் தன்மை ஆகியவை அடிப்படை நற்பண்புகள் ஆகும் என்று இஸ்லாம் ஆரம்பத்தில் இருந்தே கற்றுத் தந்துள்ளது. உதாரணமாக, முஸ்லிம்கள் மார்க்கம் அற்றவர்களின் சிலைகளுக்கு எதிராக கூட பேசக் கூடாது; ஏனெனில் அது அவர்களை எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு எதிராக பேச தூண்டி விடும் என்று திருக்குர்ஆனின் 6-வது அதிகாரம் 109-வது வசனம் கூறுகிறது. எனவே பதட்ட நிலைகள் கொழுந்து விட்டு எரியக் கூடாது என்பதற்காகவும், வெறுப்பு மற்றும் எதிர்ப்பின் சூழலில் இருந்தும் சமூகத்தைக் காக்கவும், கட்டுப்பாடு மற்றும் பொறுமையினை எல்லா நேரங்களிலும் வெளிப்படுத்த முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மற்ற மதங்களையும் அல்லது அவர்களின் மதத் தலைவர்களையும் முஸ்லிம்கள் மதிப்பது இல்லை என்று அடிக்கடி கூறப்பட்டாலும் இதை விட உண்மைக்கு தூரமான விஷயம் வேறு எதுவும் இருக்க முடியாது. உண்மையில், புனித திருக்குர்ஆனின் போதனைகளின் அடிப்படையில் அந்தந்த பிராந்தியங்களின் மக்களுக்கு வழிகாட்டவும், சீர்திருத்தவும் எல்லா நாடுகளுக்கும் இறைவனின் தீர்க்கத் தரிசிகள் அனுப்பப்பட்டதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

நாங்கள் எல்லா தீர்க்கதரிசிகளின் உண்மையையும் உறுதியாக நம்புகின்றோம். மேலும், அவர்கள் மனித குலத்தை சர்வ வல்லமையுள்ள இறைவன் பால் அழைப்பதற்காகவும் அறநெறியை போதிப்பதற்காகவும், கருத்துச் சுதந்திரம், நீதி மற்றும் மனிதநேயம் போன்ற உலகளாவிய மனித நற்பண்புகளை நிறுவுவதற்காகவும் அனுப்பப்பட்டனர் என்றும் நாங்கள் நம்புகின்றோம். இவ்வாறிருக்க, மற்ற மதங்களையோ அவற்றை பின்பற்றுபவர்களையோ அவமதிக்கவோ அல்லது கண்ணியக் குறைவாகப் பேசவோ எங்களால் எப்படி முடியும்?

எனவே எவர் மீதும் வெறுப்பில்லை என்ற எங்கள் வாதத்தில் அஹ்மதி

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 28 September 2023 Issue No. 39

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

முஸ்லிம்களாகிய நாங்கள் உண்மையாக உள்ளோம். அதோடு மட்டுமல்லாமல் எல்லா மக்கள் மீதும் நாங்கள் உண்மையான அன்பு கொண்டிருக்கின்றோம். மற்றவர்களிடம் நட்புறவுக்கான கரத்தை நீட்டவும் எப்போதும் தயாராக இருக்கின்றோம். ஒரு சிறிய உதாரணம் கொடுக்க வேண்டுமென்றால் கடந்த ஆண்டு இங்கு ஃபிலடெல்ஃபியாவில் ஓர் உள்ளூர் யூத அடக்கஸ்தலம் தாக்கப்பட்டு அதன் கல்லறைகள் அழிக்கப்பட்டன.

அப்பொழுது யூத சமூகத்திற்கு எங்களது ஆதரவை வழங்கவும், அவமானகரமான இந்த குற்றச் செயலுக்குப் பிறகு (யூதர்களாகிய) அவர்களுடனான ஒற்றுமையை நிலைநாட்டவும் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் உள்ளூர் உறுப்பினர்கள் உடனடியாக சென்றனர். அத்தகைய காரியங்களுக்காக நாம் எந்த வெகுமதியையும், நன்றியையும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், எங்கள் மதம் எதனை கற்றுத் தந்துள்ளதோ அதனை பின்பற்ற மட்டுமே நாங்கள் சென்றோம். அதாவது தேவை அல்லது துன்பம் ஏற்படும்போது மற்ற நம்பிக்கைகள் கொண்ட மக்களுடன் தோளோடு தோள் நிற்க வேண்டும் என்பதே (அந்த போதனையாகும்).

பாகுபாடு அல்லது பாராபட்சம் ஆகியவற்றிலிருந்து சுதந்திரமாக அனைத்து மக்களும் தங்கள் வாழ்க்கையை வாழ்வதற்கான உரிமையை நாங்கள் வென்றெடுக்கின்றோம். உண்மையான குறிக்கோளுடன், நேர்மையுடன் இஸ்லாமிய வரலாற்றைத் தெரிந்து கொள்ள விரும்பும் எவரும் எந்த நம்பிக்கையையும் ஏற்றுக் கொள்வதற்கான உலகளாவிய சுதந்திரம் எப்பொழுதும் இஸ்லாத்தின் ஒரு முக்கியமான அம்சமாக இருந்து வருவதைக் காண்பார்கள்.

உண்மையில், இந்த பன்முகத்தன்மை மற்றும் பரந்த மனப்பான்மையின் மகத்தான வெளிப்பாடாக புனித நபி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களால் அரேபிய நகரமான மதீனாவில் உருவாக்கப்பட்ட அரசாங்கம் இருந்தது. மக்காவில் பல ஆண்டுகள் துன்புறுத்தலுக்கு பிறகு அன்னார் தன்னுடைய பல சீடர்களோடு சேர்ந்து அங்கு இடம்பெயர்ந்து சென்று இருந்தார்கள். மற்ற மதங்கள் மற்றும் சமூகங்களின் தலைவர்களுடன் இணைந்து இஸ்லாத்தின் தூதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த பன்முகத்தன்மைக் கொண்ட நகரத்தை ஆட்சி செய்வதற்கு அடிப்படையாக விளங்கிய ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்கள்.

அந்த உடன்படிக்கை சமுதாயத்தின் அனைத்து அங்கத்தினர்களும், எந்த அடக்குமுறையும் இல்லாமல் அமைதியுடன் வாழ்வதையும், தங்களின் மதம் அல்லது நம்பிக்கைகளை சுதந்திரமாக பின்பற்றுவதையும் உறுதி செய்தது. அது மட்டுமல்லாமல் அக்காலத்தில் இருந்த வழக்கங்களின்படி ஒவ்வொரு சமூகமும், தங்கள் சொந்த சட்டங்கள் அல்லது பழங்குடி வழக்கங்களைக் கொண்டு வரையறுக்கப்பட்டிருந்தன. இவ்வாறு முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத் அடிப்படையிலான சட்டங்களை பின்பற்றினர். யூத மக்கள் தவ்ராத்தின் அடிப்படையிலான சட்டங்களைப் பின்பற்றினர். மேலும் பிற சமூகங்கள், தங்கள் சொந்த வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையிலான சட்டங்களைப் பின்பற்றினர்.

அதே நேரத்தில் தங்களுடைய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு, நாட்டின் அமைதியை நிலைநிறுத்துவதற்கும், மற்றவர்களை மரியாதையுடன் நடத்துவதற்குமான பொறுப்பு அனைத்து மக்களுக்கும் இருந்தது. இந்த ஒப்பந்தம் சமாதானத்தை வளர்த்து சகிப்புத் தன்மைக் கொண்ட ஒரு சமுதாயம் மேலோங்கி நிற்பதை உறுதி செய்தது. எனவே 1400 ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு பண்பாடுகளை இழைத்து உருவாக்கிய ஒரு சமுதாயம், மதீனாவில் வெற்றிகரமாக நிர்வகிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது.

இன்றைய உலகில் ஒரே சமுதாயத்தில் வாழும் பல்வேறு சமூகங்களுக்கும் எண்ணற்ற வித்தியாசமான சட்டங்கள் பல இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. மாறாக, எனது கருத்து என்னவென்றால், உலகளாவிய மானுட பண்புகளை நிலைநிறுத்துவது மற்றும் சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும் அறநெறி மற்றும் நீதியை மேம்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் அமைதியை ஏற்படுத்துவதே நாம் முன்னிறுத்த வேண்டிய மற்றும் முன்னுரிமை அளிக்க வேண்டிய விஷயமாக எப்போதும் இருக்க வேண்டும் என்பது மட்டுமே ஆகும்.

இதனை மேலும் விளக்கமாக கூறவேண்டுமென்றால் திருக்குர்ஆனும் இஸ்லாத்தின் தூய நபி ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் போதனைகளும், மத விஷயங்களில் எந்தவிதமான பலவந்தமும் இருக்கக் கூடாது என்பதை மிகத் தெளிவாக வரையறுத்துள்ளன. **ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அவர் நடக்க விரும்பும் பாதையை தேர்வு செய்யும் உரிமை உண்டு. நம்பிக்கை என்பது எப்பொழுதும் ஒருவரின் இதயம் மற்றும் விருப்பம் சார்ந்த ஒரு விஷயமாக இருக்கிறது; இருக்கவும் வேண்டும்.** அதே சமயம் மதம் அல்லது நம்பிக்கை சார்ந்த வேறுபாடுகள் எதுவாக இருந்தாலும் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அமைதியாக இருக்க வேண்டிய கடமையும், மேலும் ஆணாயினும் பெண்ணாயினும் சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்த செயலையும் செய்யக் கூடாது என்பதை உறுதி செய்யும் கடமையும் அவர்களுக்கு உள்ளது என்று இஸ்லாம் போதிக்கின்றது. அனைத்து மக்களும் நாட்டின் சட்டத்தை மதிக்கக் கூடிய, உண்மையான குடிமக்களாக நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக பாடுபடக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது.

எனவே உங்களில் யாருக்கும் இந்த புதிய பள்ளிவாயிலை பற்றியும் மேலும் இது முஸ்லிம்களால் மற்ற சமுதாயத்தினருக்கு எதிராக சதி செய்வதற்கோ, திட்டமிடுதலுக்கோ அல்லது வெறுப்புணர்வை தூண்டுவதற்காகவோ பயன்படுத்தப்பட்டு விடும் என்ற எண்ணம் இருந்தால் அத்தகைய பதட்டம் அல்லது கவலை உங்களுக்கு தேவையில்லை என்று நான் மீண்டும் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். இந்த கட்டிடத்திலிருந்து அன்பு, நேசம் மற்றும் சகோரத்துவத்தின் தூதுச் செய்தி மட்டுமே பிரகாசிக்கும் என்பதில் உறுதி கொள்ளுங்கள்.

இது தொடர்பாக ஒரு பள்ளிவாயிலை நிறுவுவதற்கான நோக்கங்கள் என்னென்ன என்பதை சுருக்கமாக நான் விளக்க விரும்புகிறேன். முஸ்லிம்கள் ஒன்றிணைந்து பரஸ்பர அன்பு மற்றும் ஒற்றுமையின் உணர்வுடன் ஏக இறைவனை அந்த இறைவன் கற்றுத் தந்த விதத்தில் வணங்க வழி செய்வதே ஒரு பள்ளிவாயிலின் தலையாய நோக்கமாகும். அதே நேரத்தில் மனித குலத்திற்கு சேவை செய்யும் ஒரு மையமாக அந்த பள்ளிவாயில் இருக்க வேண்டும் என்பது அந்த பள்ளிவாயிலின் இரண்டாவது அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.........)**

தமிழாக்கம்: ஷேக் ஃபயாஸ் அஸ்லம்

* * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**

93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**